வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 18.07.2021 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 227 | பக்கங்கள் : 16








# எதிர்க்கட்சிகள் ஒன்றுகூடி கொழும்பில் முக்கிய பேச்சு

## கருவின் தலைமையில் நடந்த கூட்டத்தில் தமிழரசுவும் பங்கேற்பு

கொழும்பு, ஜூலை 18

நாட்டின் பொருளாதாரம் பாரிய வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் அதனைச் செய்வது தொடர்பிலும், பலமிக்க மாற்று அரசியல் சக்தியை உருவாக்குவது குறித்தும் நேற்று பல எதிர்க்கட்சிகள் முக்கிய சந்திப்பில் ஈடுபட்டன.

முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவின் தலைமையில் கொழும்பிலுள்ள ஜானகி ஹோட்டலில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

15

## பயங்கரவாத தடைச்சட்டத்தில் திருத்தம் செய்ய குழு நியமனம்!

*கொழும்பு, ஜூலை 18*

*1978 ஆம் ஆண்டில் அமுலாகிய பயங்கரவாதத் தடை சட்டத்தின் சில சரத்துகளைத் திருத்துவதற்கான பரிந்துரைகளை சமர்ப்பிக்க ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவில் பாதுகாப்பு செயலாளர் அடங்கியுள்ளார்.*

*பயங்கரவாதத் தடைச் சட்டத்தைத் திருத்துவதற்கான பரிந்துரைகளை அட்டவணைப்படுத்துவதே இந்த குழுவின் பணி*

15

## கொரோனா தொற்றால் மேலும் 31 பேர் உயிரிழப்பு

*கொழும்பு, ஜூலை 18*

*நாட்டில் மேலும் 31 பேர் கொரோனாத் தொற்றால் மரணித்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.*

*சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு விடுத்துள்ள அறிக்கையில் இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.*

15

## யாழ்.வருகிறார் மஹிந்த!



*கொழும்பு, ஜூலை 18*

*பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 31ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகிறார்.*

*இதன்போது, சில திறப்பு விழாக்கள் மற்றும் வீட்டுத்திட்ட அடிக்கல் நாட்டு நிகழ்வுகள் என்பனவற்றில் அவர் பங்கேற்கவுள்ளார்.*

## 1,452 பேருக்கு நேற்று தொற்று

*கொழும்பு, ஜூலை 18*

*இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,452 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.*

*இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 83 ஆயிரத்து 512 ஆக அதிகரித்துள்ளது.*

15

## துமிந்தவுக்கு பதவி வழங்கி அலங்கரித்த பிரதமர் மஹிந்த

*கொழும்பு, ஜூலை 18*

*முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.*

*கொலைக் குற்றத்துக்கு தூக்குத் தண்டனை அனுபவித்து வந்த அவர், அண்மையில் ஜனாதிபதி*

15

## நாணய நிதியத்திடம் இலங்கை நிதி உதவி ஏதும் கோரவில்லை

*கொழும்பு, ஜூலை 18*

*இலங்கை அரசாங்கத்திடம் இருந்து நிதி உதவிக்கான கோரிக்கை எதுவும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை என்று சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.*

*இந்த அறிவித்தலை சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் மசாஹிரோ நொசாகி வெளியிட்டுள்ளார் என்று, இன்னர் சிற்றி பிரஸ் ஊடகம் செய்தி வெளியிட்டுள்*

15

## ஆட்சியை கவிழ்க்கவே நாட்டில் போராட்ட அலை

### அமைச்சர் சரத் வீரசேகர கூறுகிறார்



*கொழும்பு, ஜூலை 18*

*அரசின் வேலைத்திட்டங்களைக் குழப்பி ஆட்சியைக் கவிழ்க்கும் குறுகிய நோக்கத்தின் அடிப்படையிலேயே எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.*

*பாணந்துறை பகுதியில் நேற்று முன் தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில்*

15

## இரண்டு தடுப்பூசி ஏற்றினாலும் டெல்டா தொற்று பரவும் அபாயம்!

*கொழும்பு, ஜூலை 18*

*தடுப்பூசி நடவடிக்கைகள் முழுமையாக முன்னெடுக்கப்பட்டபோதிலும் டெல்டா தொற்று பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாக சுகாதார மேம்பாட்டுப் பணியகம் தெரிவித்துள்ளது.*

*குறிப்பாக தற்போது இரண்டு தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்டவர்களும் தொற்றுக்குள்ளாகும் நிலைமை*

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

ஒருநாள் சிறுத்தை பசியுடன் உணவைத் தேடி அலைந்து கொண்டிருந்தது. அப்போது இரண்டு மான்களைக் கண்டது. அதில் ஒன்று கறுப்பு மான். மற்றையது புள்ளி மான்.

அவை இரண்டும் மலையடிவாரத்தில் மேய்ந்து கொண்டிருந்தன. சிறுத்தை மிகுந்த எச்சரிக்கையுடன் மலையடிவாரமருகே சென்றது.

அதே நேரத்தில் சிறுத்தையைப் பார்த்த மான்கள் இரண்டும் வேகமாக ஓடின. பிறகு அவை இரண்டும் ஓர் இடத்தில் இடது வலது பாதைகளில் ஓடின. சிறுத்தை அந்த இடத்துக்கு வந்தது.

“எதைத் துரத்தலாம்” என்று தயங்கி நின்றது. பிறகு, “சரி.. கறுப்பு மானைத் துரத்தலாம். அதன் இறைச்சிதான் சுவையாக இருக்கும்” என்று முடிவு செய்து கறுப்பு மானைத் துரத்தத் தொடங்கியது. ஆனால், அதற்குள் அது தொலைதூரம் ஓடிப் போய் விட்டது.

உடனே சிறுத்தை “அது வேகமாக ஓடக்கூடிய மான். அதைப் பிடிக்க முடியாது. பசி வேறு அதிகமாகி விட்டது. சரி... புள்ளி மானைப் பிடிக்கலாம்” என்று தீர்மானித்து மற்ற பாதையில் ஓடியது.

ஆனால், புள்ளிமான் எப்போதோ பஞ்சாய்ப் பறந்து விட்டிருந்தது.

கூட்டமைப்பின் தலைவர்கள் தொடர்ந்து தூதராலயங்களின் படிகளை ஏறத் தொடங்கியிருக்கின்றனர்.

நல்ல விடயம்தான். சர்வதேசத்தின் உதவியை மட்டுமே நம்பியிருக்கும் ஓர் இனத்தின் தலைவர்கள் இதைவிட வேறு எதனைத்தான் செய்யமுடியும்.

அண்மைக்காலமாக சம்பந்தன் ஐயா பாராளுமன்றத்திற்கும் செல்லாமல் விடுமுறையில் இருந்தபோது மாற்றுத் தலைமை குறித்து எல்லோரும் சிந்திக்கத் தொடங்கியிருந்தனர்.

சம்பந்தன் ஐயா தனக்கு அடுத்த தலைமை குறித்து கவனம் செலுத்த வேண்டும் என்ற கருத்து பரவலாக முன்வைக்கப்பட்டதைத் தொடந்து அவர் திடீரென்று விழித்துக்கொண்டதுபோல, சக்கரநாற்காலியில் பாராளுமன்றம் வந்தார். பின்னர் இப்போது ஒவ்வொரு தூதராலயங்களாக சென்று வருகிறார்.

ஒருவர் நமது வீட்டுக்கு சாப்பாட்டுக்கு வந்து, சாப்பிட்டு முடிந்ததும், எப்படி சாப்பாடு என்று கேட்பதை இந்த ஊர்க்குருவி விரும்புவதில்லை. சாப்பாடு அவர்களுக்கு பிடிக்காமல் இருந்தாலும் “ஆகா... அற்புதம்” என்று அவர்களை பொய்சொல்ல வைக்கவேண்டிவரலாம் என்பதாலேயே அப்படிக் கேட்பதில்லை.

அதுபோலத்தான், தூதராலயங்களுக்குச் சென்றால் அவர்கள், தமிழர் தீர்வு விடயத்தில் தமது நாடு தொடர்ந்து அழுத்தம் கொடுக்கும் என்று பதில் சொல்வார்கள். நாம் மற்றவர் வீட்டுக்கு போய் சாப்பிட்ட பின்னர் சாப்பாடு நல்லாக இருக்கிறது என்பது போலத்தான், தூதுவர்களும் தீர்வு விடயத்தில் அழுத்தம் கொடுப்போம் என்றுதானே சொல்லி விடவேண்டும்.

அதை நமது தலைவர்கள் வெளியே வந்துசொல்ல, நாமும் இனி அந்த நாடு நமக்கு விடிவு தரும் என்று நம்பிக்கொண்டிருக்கிறோம்.

ஆனால், நடந்து கொண்டிருக்கின்ற சம்பவங்கள் கவலை தருகின்றன.

வடக்கு மாகாணத்தில் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள பதினைந்து பாடசாலைகள் தேசியப் பாடசாலைகளாக தரமுயர்கின்றன என அண்மையில் ஒரு செய்தி. அரிப்பு றோ.க.த.க. பாடசாலையும் அவ்வாறு தேசியப் பாடசாலையாகும் பாடசாலைகளில் ஒன்று.

இந்தச் செய்தி சொல்கின்ற செய்தி என்ன? மாகாண சபைகளுக்கு இனி இந்த பாடசாலைகளின் நிர்வாகத்தில் தலைநுழைக்க முடியாது என்பதுதானே? இனி மாகாண சபைகள் முன்பள்ளிகளை மாத்திரம் நிர்வகிக்கலாம் என்று சொன்னாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

மத்தி இப்படியே தந்த அதிகாரங்களையும் ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டிருக்க நாம் சிறுத்தை மான்களைத் துரத்திச் சென்றதுபோல ஓடிக்கொண்டிருக்கிறோமே என்று எண்ணத் தோன்றுகின்றது.!

**- ஊர்க்குருவி**

# கொத்தலாவல பாதுகாப்பு பல்கலை சட்டமூலம் மீண்டும் பாராளுமன்றில்

**விமல் வீரவன்ஸ தகவல்**

கொழும்பு, ஜூலை 18

ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலம் நாடாளுமன்றில் மீண்டும் முன்வைக்கப்படும் என தான் எதிர்பார்ப்பதாக அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித் துள்ளார்.

நேற்று சனிக்கிழமை இந்த விடயம் தொடர்பாக கருத்து தெரிவித்த அவர், அமைச்சரவை குழு கோரியதை அடுத்து குறித்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என அவர் கூறினார்.

ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் தனியார் பல்கலைக்கழகமாக அல்லாமல் அரசுக்கு சொந்தமான நிறுவனமாக வகைப்படுத்தப்பட்டது என்றும் அமைச்சர் விமல் குறிப்பிட்டார்.

ஆகவே நிறுவனத்துக்குள் இயற்றப்பட்ட சில சட்டங்கள் ஒரே சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் இதற்கு தேவையான திருத்தங்கள் செய்யப்பட்ட பின்னர் மீண்டும் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

## மகாஜன ஆசிரியருக்கு புத்தாக்குநர் விருது!



யாழ்ப்பாணம், ஜூலை 17

தெல்லிப்பழை மகாஜன கல்லூரியின் கணித ஆசிரியர் செல்லையா செலவக்குமரன் புத்தாக்குநர் விருதைப் பெற்றுள்ளார்.

இளைஞர் சேவைகள் மன்றம் நடத்திய இளம் புத்தாக்குநர்களை தெரிவு செய்வதற்கான “ஸ்ரார்ட் அப் சிறீலங்கா” (start up srilanka) நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இலத்திரனியல் சார் உபகரண வடிவமைப்புக்காகவே அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை கொழும்பு - மகரகமவில் உள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் இடம்பெற்ற நிகழ்வில் இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுதுறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ இவருக்கான விருதை வழங்கிக் கௌரவித்தார். (ஐ)

## மின்னல் தாக்கம் ஏற்படும் அபாயம்!

வடக்கின் மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, அனுராதபுரம் மற்றும் கிழக்கின் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் ஆங்காங்கே இடியுடன் கூடிய மழை பெய்யகக் கூடும் என்றும், இதன்போது, கடுமையான மின்னல் தாக்கங்கள் ஏற்படக்கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சந்தர்ப்பங்களில் மின்னல் தாக்கத்தால் ஏற்படக் கூடிய பாதிப்புகளை தவிர்த்துக் கொள்ள திறந்த வெளிகளில் நடமாடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

### கல்வி TV CHANNEL-1
**18.07.2021 ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

### கல்வி TV CHANNEL - 2
**18.07.2021 ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
18.07.2021 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆடி 02

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: editor@eelanadu.lk,**
**news@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# அமெரிக்க பூச்சாண்டி

திருகோணமலை துறைமுகத்தை அமெரிக்காவிற்கு கொடுக்கப் போவதாக ஒரு கதை கூறப்படுகின்றது. தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் என்னும் சிங்கள - பௌத்த சிறு அமைப்பு ஒன்றே இவ்வாறான ஒரு தகவலை வெளியிட்டிருக்கின்றது. இந்த அமைப்பின் தகவல்கள் எவையும் எப்போதுமே சரியான தகவல்களாக இருந்ததில்லை. அவ்வப்போது நாட்டை வெளிநாட்டினருக்கு விற்பனை செய்ய முற்படுவதாகப் புரளிகளைக் கிளப்பிவிடும் இவ்வாறான அமைப்புக்கள் சீனாவுடன் செய்யப்படும் ஒப்பந்தங்களின்போது மட்டும் ஏன் அமைதியாக இருக்கின்றன?

திருகோணமலை துறைமுகத்தின்மீது ஆர்வம் கொள்ள வேண்டிய தேவை அமெரிக்காவிற்கு இருக்கின்றதா? உண்மையில் இது ஒரு மிகப் பழைய கதை. உலகம் பனிப் போர் போட்டிக்குள் சிக்குண்டிருந்த காலத்தில், அமெரிக்கா அதிகம் வெளிநாட்டு தளங்களில் ஆர்வம் காட்டிவந்தது. 1977இல், அப்போதைய இலங்கையின் ஆட்சியாளரான ஜே. ஆர். ஜெயவர்த்தன, நாட்டை மேற்குலகிற்கு திறந்துவிட முயற்சித்தார். அதுவரை இலங்கை கடைப்பிடித்துவந்த அணிசாரா வெளிநாட்டு கொள்கையை மீறும் வகையில் செயல்பட்டார். இந்த பின்னணியில்தான் திருகோணமலை துறைமுகத்தை அமெரிக்காவின் கடற்படை தளத்திற்கு வழங்கப் போவதான கருத்துக்கள் பரவலடைந்தன. அப்போது அமெரிக்காவிற்கு எதிர் நிலையிலிருந்த இந்தியாவில், இந்த கருத்து மேலோங்கியிருந்தது. பின்னர் இந்தியா கோபமடைந்தது, இலங்கையின் இனப் பிரச்னையில் நேரடியாக தலையீடு செய்த கதைகளை எல்லாம் நீங்கள் அறிவீர்கள்.

ஆனால், இன்று உலக அரசியல் நிலைமைகள் தலைகீழாகிவிட்டன. இன்று இந்தியாவும் - அமெரிக்காவும் பங்காளிகள். சீனாவை எதிர்கொள்வதில் இரண்டு நாடுகளும் இணைந்து செயல்படுகின்றன. 2015இல் ஆட்சி மாறியதை தொடர்ந்தும் இவ்வாறானதொரு கருத்து எட்டிப்பார்த்தது. அதாவது, மொறிசியஸ் குடியரசின் ஆள்புல எல்லைக்குள் வருகின்ற டியாகோ காசியா (Diego Garcia) தீவில் அமெரிக்காவின் மிகவும் பிரமாண்டாமான கடற்படை தளம் ஒன்றுண்டு. மொறிசியல் பிரித்தானிய காலனித்துவத்திற்கு உட்பட்டிருந்த பகுதி. இந்தப் பகுதியின் மீது பிரித்தானியா இப்போதும் தனது காலை பதித்திருக்கின்றது. இந்தத் தீவின் சட்ட ரீதியான உரித்து தொடர்பான சர்ச்சைகள் நீண்ட காலமாக இடம்பெற்றுவருகின்றன. இந்த பின்னணியில் 2016இல் இந்த தீவிலுள்ள படைத்தளத்தை அமெரிக்கா கைவிட வேண்டிவரும் என்னும் அபிப்பிராயங்கள் வெளிவரத் தொடங்கின. இதற்குப் பதிலாக திருகோணமலையை சிறந்த ஒரு தளமாக அமெரிக்கா அடையாளம் கண்டுள்ளதாகக் கதைகள் உலவின.

ரணில் பிரதமராக இருந்த போது அவர் இந்த உடன்பாட்டில் கையெழுத்திட்டுவிட்டாரென இதே தேசப் பற்றுள்ள தேசிய இயக்கம் மட்டுமல்ல, ராஜபக்ஷக்களின் முகாமில் இருந்த திஸ்ஸ விதாரண, வாசுதேவ நாணயக்கார போன்றவர்கள் அமெரிக்க பூச்சாண்டியை காண்பித்தனர். ரணில் அதனை மறுத்ததுடன், இது தவறான கருத்து என்றும் தெரிவித்திருந்தார். அதேவேளை அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள பேச்சாளரும் இது வதந்தி என்றும் இலங்கையில் படைத்தளமொன்றை அமைக்கும் எண்ணம் எதுவும் தங்களுக்கில்லை எனவும் தெரிவித்திருந்தார்.

முன்னர்,ரணில் அரசாங்கத்தின்மீது குற்றசாட்டை முன்வைத்த அதே குழுவினரே, இப்போது மீண்டும் அதே குற்றச்சாட்டை தற்போதைய அரசாங்கத்தின்மீது முன்வைக்கின்றனர். பஸில் ராஜபக்ஷ நிதி அமைச்சராக பதவியேற்ற பின்புலத்தில்தான் இவ்வாறான குற்றச்சாட்டை முன்வைக்கின்றனர். அடிப்படையில் இது பஸிலின் மீதான எதிர்ப்பு மட்டுமே. பஸில் அமெரிக்க குடியுரிமை பெற்றவர் என்பதை சுட்டிக்காட்டி, அவரை எதிர்க்கும் நோக்கத்திலேயே இவ்வாறான வதத்திகளை குறித்த சிங்கள அமைப்பு பரப்ப முற்படுகின்றது. நமது சூழலிலுள்ளவர்கள், இதனை சரியாக விளங்கிக் கொள்ளாமல், அவசரப்பட்டு அறிக்கைகளையும் கருத்துக்களையும் முன்வைக்கின்றனர்.

திருகோணமலையில் அமெரிக்கா ஒரு படைத்தளத்தை நிறுவுவது என்பது சாதாரண விடயமல்ல. மேலும் படைத்தளங்களை இரகசியமாக நிறுவ முடியாது. அமெரிக்க பூச்சாண்டியை காண்பித்து சிங்கள மக்களை குழப்புவதே இவ்வாறான 'தேசப் பற்றுள்ள, தேசிய' என்னும் சொற்களை காவித்திரியும் அமைப்புகளின் நோக்கமாகும். மேலே குறிப்பிடப்பட்ட அமெரிக்காவின் கடற்படை தளத்திற்கான உடன்பாடு, 2036 வரை தொடரும் என்று அமெரிக்கா ஏற்கனவே அறிவித்துவிட்டது. 2016இல் பிரித்தானியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களை தொடர்ந்தே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது. பின்னர் எதற்கு திருகோணமலை?

# சிறுநீரகம், நுரையீரல், இதய பாதிப்புகளை ஏற்படுத்தும் கொரோனா வைரஸ் தொற்று!

கொரோனா வைரசால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்படும் இளம் வயதினர் கூட, 50 வயதுக்கு மேற்பட்டவர்கள் கொரோனாவால் பாதிக்கப்படுவதுபோல் உடல் உபாதைகளால் பாதிக்கப்படுகிறார்கள் என ஓர் ஆய்வில் தெரியவந்துள்ளது.

19 முதல் 49 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு கொரோனாவுக்கான சிகிச்சை வழங்கப்படும்போது, 10 இல் 4 பேருக்கு சிறுநீரகம், நுரையீரல் போன்ற உறுப்புகளும் பாதிக்கப்படுகின்றன.

2020ஆம் ஆண்டில் கொரோனா முதல் அலையின்போது, பிரிட்டனில் இருக்கும் 302 வைத்தியசாலைகளில் அனைத்து வயது வரம்பைச் சேர்ந்த 73,197 நோயாளிகளிடம் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

"இது வெறுமனே வயதானவர்கள், பல வீனமானவர்களுக்கான நோய் அல்ல என்பது தான் செய்தி" என்கிறார் பேராசிரியர் கலும் செம்பில். இவர் தான் இந்த ஆய்வை தலைமை தாங்கி வழிநடத்தியவர்.

"கொரோனா வெறுமனே ஒரு ப்ளூ காய்ச்சல் அல்ல. பல இளம் வயதினர் கூட சிக்கலான உடல் உபாதைகளோடு மருத்துவ மனைக்கு வருவதை நாங்கள் பார்க்கிறோம். அதில் சிலரை எதிர்காலத்திலும் தொடர்ந்து கண்காணித்து சிகிச்சை வழங்க வேண்டி இருக்கிறது. இதைத் தான் தரவுகள் உறுதிப்படுத்துகின்றன" என்கிறார் அவர்.

இந்த ஆய்வு பிரிட்டனின் ஏழு பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சியாளர்களால் நடத்தப்பட்டது. கொரோனாவின் போது சிக்கலான உடல் உபாதைகளைக் கொண்டவர்களின் எண்ணிக்கையை இங்கிலாந்தின் சுகாதாரம், சமூக பாதுகாப்பு மற்றும் பொது சுகாதாரத் துறை கவனத்தில் எடுத்துக் கொண்டு அவர்களை தனியாகக் குறிப்பிட்டது.

கொரோனாவுக்காக வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டவர்களில், கிட்டத்தட்ட பாதி பேர், குறைந்தபட்சமாக ஒரு மருத்துவ சிக்கலையாவது எதிர்கொண்டார்கள். பொதுவாக சிறுநீரகப் பிரச்னைகள், நுரையிரல் சார் பிரச்னைகள் மற்றும் இருதயம் சார் பிரச்னைகளால் அவர்கள் பாதிக்கப்பட்டார்கள்.

குறிப்பாக 50 வயதுக்கு மேற்பட்டவர்களில், 51 சதவீதம் பேர் ஏதாவது ஒரு நோயால் பாதிக்கப்பட்டார்கள். இவர்களைப் போல 30 - 39 வயதினர்களில் 37 சதவீதம் பேரும், 40 - 49 வயதினர்களில் 44 சதவீதம் பேரும் ஏதாவது ஒரு சிக்கலான உடல் உபாதையால் பாதிக்கப்பட்டார்கள். அதை செவிலியர்களோ அல்லது ஆராய்ச்சியில் பங்கெடுத்த மாணவர்களோ பதிவு செய்திருக்கிறார்கள்.

**நோயெதிர்ப்பு மண்டலமே பாதித்திருக்கலாம்**

தீவிர கொரோனா வைரஸ் பாதிப்பால் எப்படி உடல் உறுப்புகள் பாதிக்கப்படுகின்றன என்பது தொடர்பாக மருத்துவர்களிடம் ஒரு தெளிவான பதில் இல்லை. மனிதர்களின் நோயெதிர்ப்பு மண்டலமே, உடலில் ஆரோக்கியமாக இருக்கும் திசுக்களை பாதித்திருக்கலாம் என கருதப்படுகிறது.

எஸ்ஸெக்ஸைச் சேர்ந்த பால் கோட்ஃப்ரேவுக்கு மார்ச் 2020 இல் கொரோனா தொற்று ஏற்பட்டது. அதன் பிறகு நெஞ்சு வலி என கூறியவரை பரிசோதித்துப் பார்த்தபோது அவர் பிராங்கியெக்டாசிஸ் (bronchiectasis) என்கிற நோயால் பாதிக்கப்பட்டு இருந்தார். நுரையீரலில் இருக்கும் பிராங்கி என்கிற பகுதியில் ஏற்படும் தொற்று மற்றும் அழற்சியால் ஏற்படும் நோய் இது.

"தேசிய சுகாதார சேவை (பிரிட்டன் நாட்டின் பொது சுகாதார அமைப்பு) ஊழியர்கள் என்னை கவனித்துக் கொண்டார்கள். அவர்கள்தான் என்னை காப்பாற்றினார்கள். அதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை" என்கிறார் போல்.

இந்த ஆய்வு, மருத்துவ சஞ்சிகையான "தி லான்செட்" டில் பிரசுரிக்கப்பட்டது. ஏற்கனவே பல்வேறு உடல் உபாதைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, கொரோனா தொற்று ஏற்பட்டால் அவர்களுக்கு கூடுதல் சிக்கல் ஏற்படலாம் என அந்த ஆய்வில் கூறப்பட்டிருக்கிறது. அதே போல இளம் வயதினர் மற்றும் நல்ல உடல் நலத்தோடு இருப்பவர்களுக்கு கூட சிக்கலான உடல் நலக்கோளாறுகள் ஏற்படும் அபாயம் அதிகம் இருப்பதாக அதில் கூறப்பட்டுள்ளது.

**இளம் வயதினர்**

கொரோனா தொற்றின் தீவிரத்தை நிர்ணயிப்பதில் வயது ஒரு மிகப் பெரிய காரணியாக இருக்கிறது. இங்கிலாந்தில், கொரோனாவால் பாதிக்கப்பட்டு மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லப்பட்ட 4,06,687 பேரில் 62 சதவீதத்தினர் 65 வயதுக்கு மேற்பட்டவர்கள். மீதமுள்ள 1,55,866 பேர் 65 வயதுக்கு உட்பட்டவர்கள். அவர்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்ட பின் மருத்துவம் தேவைப்பட்டது.


கொரோனாவால் எளிதில் பாதிக்கப்படக் கூடியவர்கள், வயதானவர்களுக்கு அதிகம் கொரோனா தடுப்பூசி செலுத்தப்படுவதால், கொரோனாவால் பாதிக்கப்பட்டு மருத்துவ மனைக்கு வருவோரின் சராசரி வயது குறைந்து வருகிறது.

இங்கிலாந்தில் ஜூலை 4ஆம் திகதி வரையிலான வாரத்தில், 85 வயதுக்கு மேற்பட்டவர்களில் 17 பேர் மட்டுமே கொரோனாவால் பாதிக்கப்பட்டு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர். 25 - 44 வயதுக்கு உட்பட்டவர்களில் 478 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்த ஆய்வு கொரோனா முதல் அலையின் போது 2020 ஜனவரி 17 முதல் 2020 ஒகஸ்ட் 4ஆம் திகதி வரை நடத்தப்பட்டது. இது கொரோன தடுப்பூசி பரவலாக கிடைக்கத் தொடங்குவதற்கும், புதிய கொரோனா திரிபுகள் கண்டுபிடிக்கப்படுவதற்கும் முந்தைய காலம் என்பது குறிப்பிடத்தக்கது.

கொரோனாவால் தீவிரமாக பாதிக்கப்பட்டவர்கள், அதிக சிக்கலான உடல் உபாதைகளை எதிர்கொள்கிறார்கள் என்கிறது இந்த ஆய்வின் தரவு. எனவே தற்போதைய கொரோனா அலைகளில் கொரோனாவின் தீவிரத்தைக் குறைக்க தடுப்பூசிகளின் முக்கியத்துவத்தை இது சுட்டிக்காட்டுகிறது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஜூலை - 18 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம் - ஆடி 02

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 7.30 - 9.00 |
| ராகு காலம் | : | 4.30 - 6.00 |
| திதி | : | சூன்ய |

## இன்றைய ராசிபலன்

**18.07.2021**

**மேடம்**
குடும்பத்தில் அமைதி நிலவும். சுபவிஷயத்தில் நல்ல முடிவு கிடைக்கும். தாய்வழி உறவினால் நன்மை கிடைக்கும். உடல்நிலை சீராகும். பணியிலிருந்த அழுத்தங்கள் படிப்படியாக விலகும்.

**இடபம்**
அதிர்ஷ்டத்தால் பதவி உயர்வு கிடைக்க வாய்ப்புண்டு. பணத்தேவை பூர்த்தியாகும். கவலை தீர்ந்து நிம்மதி பிறக்கும். நீண்ட நாளாக எதிர்பார்த்திருந்த நல்ல செய்தி கிடைக்கும்.

**மிதுனம்**
பணியில் வளர்ச்சி ஏற்படும். பொழுதுபோக்கில் ஈடுபடுவீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சொத்து பிரச்னை தீரும். உறவினரால் உதவி கிடைக்கப் பெறுவீர்கள். சுபசெய்தி வந்து சேரும்.

**கடகம்**
புதிய முயற்சியில் ஈடுபட்டு வெற்றி பெறுவீர்கள். குடும்பத்தினருடன் நேரத்தைச் செலவிட்டு மகிழ்ச்சி காண்பீர்கள். குடும்பத்தினரின் ஆதரவும் கண்டு மனம் நெகிழ்வீர்கள்.

**சிம்மம்**
புதிய நண்பர்களின் அறிமுகத்தால் நன்மை கிடைக்கப் பெறுவீர்கள். கவலை தீரும். எடுத்த முயற்சியில் முன்னேற்றம் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் வழக்கத்தை விட லாபம் அதிகரிக்கும்.

**கன்னி**
அலுவலகப் பணி ஒன்றை முடித்து அதிகாரியிடம் பாராட்டுப் பெறுவீர்கள். நீண்ட நாள் விரும்பிய ஆடம்பர பொருள் ஒன்றை வாங்குவீர்கள். குடும்பத்தினர் மகிழும்படியான செயல் ஒன்றைச் செய்வீர்கள்.

**துலாம்**
தாமதப்பட்ட விஷயம் ஒன்று எளிதாக நிறைவேறும். பெற்றோரின் உடல்நலத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். நண்பர்கள் உதவுவர். பிரச்னை ஒன்றை நல்ல முறையில் பேசித் தீர்ப்பீர்கள்.

**விருட்சிகம்**
அலுவலகத்தில் பணிச்சுமை படிப்படியாக குறையும். ஓய்வு எடுப்பீர்கள். பணி முயற்சியில் சாதகமான முடிவு கிடைக்கும். பழைய பிரச்னை ஒன்றில் நல்ல முடிவு கிடைக்கும்.

**தனுசு**
மனதில் இருந்த மந்தநிலை மாறும். சுறுசுறுப்புடன் பணியாற்றுவீர்கள். இளைஞர்கள் துரிதமாக செயல்பட்டு வளர்ச்சி காண்பார்கள். முன்னேற்றத்துக்கான வாய்ப்பு கிடைக்கும்.

**மகரம்**
எதிர்காலம் பற்றிய கவலை தீரும். சுபசெய்திகள் வந்து சேரும். நல்ல வாய்ப்புகளை பயன்படுத்திக் கொண்டு முன்னேற்றம் காண்பீர்கள். சகோதரர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும்.

**கும்பம்**
மற்றவர் பிரச்னைகளில் தலையிட வேண்டாம். நிதானமாக பேசுங்கள். கோபத்தைக் கட்டுப்படுத்துவது நல்லது. தியானம், ஆதங்கம், எரிச்சல் படாமல் பொறுமையை கடைபிடிப்பது அவசியம்.

**மீனம்**
எந்த விஷயத்திலும் விழிப்புடன் ஈடுபடுவது நல்லது. அலட்சியமாக வேண்டாம். அக்கறையுடன் பணிபுரிவது அவசியம். முயற்சிக்கான பலன் கிடைக்காமல் போகாது. பரபரப்பான நாள்.

# 50 களில் இருந்து இறுதிவரை "புதுமைப்பிரியை" ஆகவே வாழ்ந்தவர்!

## திருமதி பத்மா சோமகாந்தன் ஒரு வருட நினைவுப்பகிர்வு!

**எம்.எஸ்.தேவகௌரி**

"எழுத விரும்புகிற எல்லோருக்கும் எழுதுகோல் வசப்படுவதில்லை. "எனக்குச் சொந்தமான எழுதுகோல்கொண்டு, எதையும் எழுதுவேன்" என்று கிறுக்குகிறவர்களை, எழுத்துலகம் தன் நுழைவாயிலிலேயே தடுத்து நிறுத்திவிடுகிறது. தடை அகன்று அதற்குள் நுழையவேண்டின், மானுடம் புரிந்திருப்பதும் மற்றெல்லாம் அறிந்திருப்பதும் அவசியம். இத்தகைமைகளைதன்னியல்பாய்க் கொண்டிருந்த "பத்மா அம்மையாரை" வசப்படுத்த, உண்மையில் எழுதுகோல்தான் காத்துக் கிடந்திருக்கும்போல!" என்று திருமதி பத்மா சோமாகந்தனுடன் பழகிய ராஜாமகள் குறிப்பிட்டிருந்தார்.

1950களில், "புதுமைப்பிரியை" ஆகி இலக்கிய சமூகத்தை பெண்கள் பக்கம் திரும்பிப்பார்க்க வைத்தவர் திருமதி பத்மா சோமகாந்தன்! 2020 வரைக்கும் புதுமைகளை உள்வாங்கி எழுத்தை ஆண்டுகொண்டு இருந்தவர். 1954இல் நடந்த சுதந்திரன் வாரப் பத்திரிகையின் சிறுகதைப்போட்டியில் முதல்பரிசு பெற்ற முற்போக்கு பெண்மணி இவர். காணும் போதெல்லாம் அந்த நாட்களை கதைகதையாகக் கூறக்கேட்டிருக்கிறோம். பெண்களெல்லாம் கண்ணீர் இழுப்பிகள் என்று எண்ணிக் கொண்டிருந்த காலத்தில் சமூகம், அரசியல், தனிமனித உணர்வுகள் என கதையும், மேடைப்பேச்சுமாக இருந்த காலத்தில் தான்னால் தன்குடும்பம் எதிர்கொண்ட மனத்துயர்களையும் பகிர்ந்துள்ளார். ஒரு பெண்ணாக அதிலும் ஒரு பிராமணப் பெண்ணாக அரசியல் மேடையில் அரசியல்பேசி, சமூகக் களத்தில் அரசியலும் முற்போக்கும் எல்லாருக்கும் ஆனது அதில் ஆண்பெண் பேதம் இல்லை என துருத்திக்கொண்டு எழுந்து நின்றவர். தமிழுக்காக பெண்களுக்காக என எந்தஇடத்திலும் தன் எழுத்தாலும், பேச்சாலும் சலசலப்பை ஏற்படுத்திவிடுவார்.

சமூகத்திற்காக தமது நேரத்தை ஒதுக்குவதில் திருமதி பத்மா சோமகாந்தனும் திரு சோமகாந்தனும் போட்டிபோட்டுக் கொண்டு முன்னின்றவர்கள். இலக்கியத்திற்காக, பெண்களுக்காக மாகாநாடுகள், பட்டறைகள் என அவற்றை ஒழுங்கமைப்பதிலும் கொண்டு நடத்துவதிலும் வல்லவர்களாக இருந்தனர். அந்த வகையில் யாழ்ப்பாணத்தில் நாவலர் விழா, பாராதியார் விழா என தமிழுக்கு விழா எடுத்தபோது சோமகாந்தன் அவர்களுடன் இணைந்து இவரும் தனது பணிகள்பற்றி கூறியிருக்கிறார். அன்றில்இருந்து அவரது இறுதிக்காலம் வரை பொது அமைப்புகளுக்கு சந்திக்க இடம் தேவையென்றால், தனது வீட்டை அதற்கு பயன்படுத்த முழுமனதுடன் உவந்தளிப்பவர். எந்நேரமும் உற்சாகத்துடன் வாசிப்பும் எழுத்தும் என இயங்கும்இவர் மற்றவர்களையும் தட்டிக்கொடுத்து உற்சாகப்படுத்துவதில் பின்நிற்பதில்லை. எழுத முடிந்தும்எழுத முடியாத வேலைப் பழுவில் இருக்கும்பெண்களுக்கு தலைப்பைக் கொடுத்து இரண்டு கிழமைக்குள் கட்டுரை வேண்டும். என கறாராக நின்று எழுதுவித்து பல பெண்களை உற்சாகப் படுத்தியுள்ளார். கொழும்பு தமிழ் சங்கத்தில் நடக்கும் பெண்கள் தினநிகழ்வில்அதை வடிவமைத்து கொண்டு நடத்துபவர் இவராக இருப்பார். இந்த வயதிலும் பெண்ணிய கருத்துக்களை செவ்வனவே



உள்ளவாங்கி அதைப் புரிந்து கொண்டு அதற்கான களங்களையும்,காலங்களையும் உருவாக்கி கருத்தியலை சமூகத்துள் கொண்டு சேர்ப்பதில் சளைக்காமல் இயங்கினார்.

இலக்கியத்தில் உலாவரும் பலருக்கு விழா எடுக்கும் கலாசாரம் இருக்கின்றபோது ஏன் அவர்கள் பெண் இல்கியவாதிகளுக்கு எடுப்பதில்லை என்ற கேள்வியை எழுப்பி ஔவைக்கு தான் விழா எடுக்கவேண்டும் என மனதார இயங்கி அதை செய்தும் காட்டினார். கொழும்பில் 2014இல் ஔவைக்கு விழா எடுத்து பல தலைப்புகளில் பலரையும் ஆய்வு செய்யவைத்து சிறப்புற நடத்தினார்.

திருமதி பத்மா சோமகாந்தன் இலக்கியம், பெண்ணியம், ஊடகம், ஆன்மீகம் பற்றி அந்த அந்த காலத்தில் ஆழமான பார்வையைக் கொண்டிருந்தார். ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் முன்னரைவிடவும் உற்சாகத்துடன் எழுத்துலகில் பிரகாசித்தார். ஒவ்வொரு மனிதரையும் கூர்ந்து நோக்கும்பண்பும் ஆழ ஊடுருவும் அறிவும் வாய்க்கப்பெற்றவராக தன் கதைகளைக் கட்டுரைகளை முன்வைப்பவர் இவர். அந்த வகையில்தான்கண்ட பெண்களில் 24பேரைப்பற்றி தொகுத்து எழுதிய நூல் "ஈழத்து மாண்புறு மகளிர்". பெண்களின், இளைஞர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை முன்வைத்த கேள்விபதில் "நெஞ்சுக்கு நிம்மதி" என்ற தலைப்பில் நூலக வந்தது. ஒவ்வொரு தனி மனிதர்களையும் உற்றுநோக்கும் இவரது கூருணர்வுக்கு சான்றாக இவரது சிறுகதைத் தொகுப்புகள் உள்ளன.

இலக்கிய இணையர்களாக வலம் வந்தவர்கள் 2006இல் திரு சோமகாந்தனின் இழப்பிற்கு பின் உறவுகள் குறித்த பார்வையில்போலிகளையும்வெறுமையையும் உணர்ந்தவராக மீண்டும் சமூக வெளிக்குள் தன்னை முன்னிறுத்தினார். முன்னரைவிடவும் வீறுகொண்டு எழுத்துப் பணிசெய்தார்." எழுத்து ஒன்றுதான் என் துயர்தீர்க்கும்" என்றவர், தன்படைப்புகளுக்காகவும் பத்திரிகைகளுக்காகவும் எழுதினார். எண்ணற்ற சந்திப்புகளில் கலந்துகொண்டு நல் உரையாற்றினார். "ஓய்வுக்குப் பின்னரும் ஓய்வின்றி இருக்கிறீர்களே!" என்றால், "அதுவே எனக்கான டொனிக்" என்று சிரிப்பார்.

திருமதி பத்மா சோமாகாந்தன் தான் அங்கம் வகித்த பல்வேறு இலக்கிய குழுக்களில் நடைபெறும் ஆதிக்க செயற்பாடுகளை மனம்நொந்து கூறுபவர் அல்ல. அந்த அந்த இடத்திலேயே அதற்கு பதிலிறுத்து தன்னை ஒரு தமிழ்ப் பெண் ஆளுமையாக அடையாளப்படுத்திவிடுவார். விவாதங்களின்போது தன் கருத்தை அவர் நியாயமாகப் பதிவு செய்ததை பல முறை கண்டிருக்கிறேன். அது பலருக்கு ஒவ்வாமையைக் கொடுத்திருக்கலாம். அவரின் சொந்த விளம்பரத்திற்காகதான் அப்படிச் செய்கிறார் என ஒவ்வாமைக்காரர் புலம்புவதுண்டு. ஆனாலும் பெண்களுக்கான இடத்தை ஏற்படுத்துவதற்கும் அதைத் தக்க வைப்பதற்காகவும் தான் அவ்வாறு செய்ததாக அவர் கூறும்போது பெருமிதம் பொங்கும். 1950களில் எவ்வாறு தன்னை ஒரு புதுமைப்பிரியையாக கண்டெடுத்தாரோ அதையே அவர் இறுதிவரை கடைப்பிடித்து வாழ்ந்தார்.

இளவயதினரிடம் வெகு இயல்பாய் தானாகவே இறங்கி வந்து பழகும் பக்குவமும் உற்சாகப்படுத்தும் பண்பும் இவரின் முத்திரையாகும். பல ஊடகங்களில் எழுத்தாளராக இயங்கிக் கொண்டிருந்தபோது ஊடகங்களில் வேலைசெய்யும் தமிழ் பெண்களுக்கு ஒரு அமைப்பை நிறுவுவதற்கும் அதற்காக தனது இல்லத்தில் இடம் தந்து கூட்டங்களைக் கூட்டுவதற்கும் உதவியாக இருந்தார். அப்போது வேலை செய்யும் ஊடகப்பெண்களுக்கு நேர நெருக்கடியாக இருந்தபோது தானே எல்லா பொறுப்பையும் எடுத்து தலைவராக நின்று "ஊடறு" என்று பெயர் சூட்டி அந்த பெயரை பேராசிரியர் சிவத்தம்பியிடம் விவாதித்து முன்னிறுத்தினார். பல கூட்டங்களை, பயிற்சிப்பட்டறைகளை, சர்வதேச பெண்கள் தினத்தை பெருநிகழ்வுகளாக நிகழ்த்தி காட்டினார். இதற்கு உறுதுணையாக நின்ற காலம் சென்ற சாந்தி சச்சிதானந்தனும் இந்த இடத்தில் நினைவுகூரத்தக்கவர்கள். பிற்காலங்களில் என்ற பெயரில் புலம்பெயர் நாட்டில் பெண்கள் அமைப்பு ஒன்று இருந்ததால் அந்த பெயர் கைவிடப்பட்டது. இவ்வாறு பெண்கள் முன்னேற்றம் என்றால் முன்னிற்கு நிற்பவர் பத்மா சோமாகாந்தன்.

புரட்சிக்காரராக இருந்தாலும் கால மாற்றங்கள் பலரை காலத்தோடும் சமூகத்தோடு ஒத்தோட வைத்து புரட்சிக்கருத்துக்களை நீர்த்துப்போகச் செய்துவிடும். பத்மா அம்மையாரிடம் அதைக் காணமுடியாது. இறுதிக் காலங்களில் கூட "என்னால் அதிகம் சிந்திக்க முடியாமல் இருக்கிறது. என்னிடம் கட்டுரை கேட்டிருக்கிறார்கள். புதிய கருத்துக்கள் இருந்தால் சொல்லுங்கள்...என்று கூறி ஒவ்வொரு விடயத்தையும் எப்படிப்பார்க்கலாம்? எப்படி சிந்திக்கலாம்? என பல்வேறு கோணங்களையும் விபரிக்கும்படி கேட்பார். உண்மையில் அதைப்பார்த்து வியந்திருக்கிறோம். அதற்காக இறுதிக்காலங்களில் ஒருமுறை அவரைச் சந்தித்து உரையாடினோம்.

இலக்கியகாரர் , சமூகத்திற்காக இயங்கியவர்களின் வயது மூப்பின்இறுதிக்காலங்கள்எல்லோரையும் போல் உற்சாகம் அற்றவைதான். ஆனால் இவர்கள் சந்திக்கவும் கதைக்கவும் காணவும் விரும்புவது தமது இலக்கிய சொந்தங்களையே. அதற்கு இவரும் விதிவிலக்கல்ல. அதற்கு இந்த கொரோனா என்ற பெரும் தொற்றுக்காலம் அனுமதிக்கவில்லை. அந்த துயர் இன்னும் உள்ளது. 2020 ஜூலை 15ஆம் திகதி அவரின் இறப்பிலும் பலராலும் பங்கற்க முடியாது போனது. தமிழுக்கு பெண்களுக்குஎன துடித்துக்கொண்டிருந்த ஒரு இதயமும் மூளையும் துடிப்பதை நிறுத்திக்கொண்டாலும் விதைத்த சிந்தனைப்பொறிகள் ஆங்காங்கே எரிந்துகொண்டிருக்கின்றன. ■

# முகக்கவசம் அணியாதவர்களுக்கு ஆறு மாதங்கள் சிறைத் தண்டனை

## விசேட சுற்றிவளைப்பு நேற்று முதல் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 18

**பொது இடங்களில் நடமாடும்போது முகக்கவசம் அணியாதவர்களுக்கு 6 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட உள்ளதாகவும், அவ்வாறு தனிமைப்படுத்தல் விதிகளை மீறி நடமாடுவோரை கைதுசெய்வதற்கான விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் நேற்று முதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

முகக்கவசம் அணியாதவர்களை கைது செய்வதற்கு நேற்று முதல் விசேட சுற்றிவளைப்புகளை மேற்கொண்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கொழும்பின் பல்வேறு சன நெரிசல் நிறைந்த பகுதிகளில் பொதுமக்கள் முகக்கவசமின்றி நடமாடுவதாக புலனாய்வு தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

முகக்கவசமின்றி பொது வெளியில் நடமாடுவது தனிமைப்படுத்தல் சட்டத்தின் அடிப்படையில் குற்றமாகும்.

அந்த குற்றங்கள் நிரூபிக்கப்படும் ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதமும், 6 மாத சிறைத் தண்டனையும் விதிக்கப்படும்.

எனவே முகக்கவசம் அணியாது சன நெரிசல் மற்றும் பொதுவெளியில் நடமாடுபவர்களை கைது செய்வதற்கு விசேட பொலிஸ் குழுக்கள் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# எரிபொருள் பற்றாக்குறை இல்லை! அமைச்சர் கம்மன்பில கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 18

நாட்டில் எரிபொருள் பற்றாக்குறை இருப்பதாக தெரிவித்து வெளியாகும் செய்திகள் அனைத்தும் தவறானவை என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நாட்டில் 27 நாள்களுக்கு போதுமான அளவு பெற்றோல் பங்குகளும், 24 நாள்களுக்கு போதுமான டீசல் பங்குகளும் இருப்பதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

பணம் செலுத்தாததால் எந்த ஒரு கப்பலும் திரும்பிச் செல்லவில்லை என்றும் எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

# மேலும் 962 பேர் பூரண குணம்

கடந்த 24 மணிநேரத்தில் கொரோனா தொற்றில் இருந்து மேலும் 962 பேர் பூரண குணமடைந்துள்ளனர்.

இதனையடுத்து, நாட்டில் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 55 ஆயிரத்து 833 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் இதுவரை கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 2 இலட்சத்து 82 ஆயிரத்து 60 ஆக பதிவாகியுள்ளது.

அதேநேரம், கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 702 ஆக பதிவாகியுள்ளது.

# ஜனாதிபதி தலைமையில் ஆளும்கட்சி உறுப்பினர்களிடையே இன்று சந்திப்பு

கொழும்பு, ஜூலை 18

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஆளும் கட்சியின் உறுப்பினர்களுக்கிடையிலான சந்திப்பொன்று இன்று இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதி மாளிகையில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளது.

உதய கம்மன்பிலவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் முன்வைத்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான விவாதம் இடம்பெறவுள்ள நிலையில் இந்த சந்திப்பு நடைபெறவுள்ளது.

# லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் கொரோனாவால் இதுவரை 10 சிறுவர் பலி!

கொழும்பு, ஜூலை 18

கொழும்பு - பொரளை லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் இதுவரை கொரோனா தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப்பட்ட 10 சிறுவர்கள் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் ஜி.எஸ்.விஜேசூரிய தெரிவித்தார்.

அத்துடன், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 490 சிறுவர்களுக்குத் தொற்று உறுதியானதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, தொற்றுக்குள்ளான எவரும் மருத்துவமனையில் பாதிக்கப்படவில்லை. அவர்கள் சமூகத்தில் பாதிக்கப்பட்ட நிலையில் அடையாளம் காணப்பட்டனர் எனவும் பணிப்பாளர் தெரிவித்தார்.

# பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வவுனியாவில் கவனயீர்ப்பு போராட்டம்!

வவுனியா, ஜூலை 18

விலைவாசி உயர்வை கண்டித்தும், எரிபொருட்களின் விலையேற்றம், மற்றும் மக்களின் உரிமைக்காக போராடுபவர்களை கைதுசெய்வது உட்பட பல்வேறு விடயங்களிற்கு எதிர்ப்பு தெரிவித்து புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசகட்சியினரால் வவுனியா பழைய பஸ் நிலைய த்துக்கு அருகாமையில் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில்-

கோட்டாபய தலைமையிலான அரசாங்கம் மக்கள் விரோதச் செயற்பாடுகளை தொடர்ந்து கொண்டிருப்பதை அண்மைக் காலங்களாக அவதானிக்க முடிந்துள்ளது.

குறிப்பாக உணவுப்பொருட்கள் மற்றும், எரிபொருள்ஆகியவற்றின் சடுதியானவிலை அதிகரிப்பானது நாட்டுமக்களை, குறிப்பாக உழைக்கும் மக்களை வாட்டிவதைத்து வருகின்றது. மக்களின் நலனை முன்னிறுத்துவோம் என்று ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர்கள் மக்கள் மீது சுமைகளையும் துன்பங்களையும் ஏற்படுத்திய நிலையில், மக்கள் வீதியிலே இறங்கி போராட வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நாட்டின் சொத்துக்களையும் இறைமையும் தாரைவார்க்கும் அரசின் செயற்பாடுகளை கண்டிக்கும் அரசியல் சமூக செயற்பாட்டாளர்களை பொலிஸ் அராஜகத்தை கட்டவிழ்த்து கைது செய்து தனிமைப்படுத்தும் செயலை இந்த அரசு முன்னெடுத்துவருகின்றது.

விவசாயத்தை நம்பி வாழும் மக்கள் உரத்தை பெற்றுக் கொள்ளமுடியாமல் அவதிப்பட்டு வருகின்றனர். அதற்கான மாற்றுக்கொள்கை அரசினால் முன்னெடுக்கப்படவில்லை. இவற்றுக்கு வன்மையான கண்டனங்களை நாம் தெரிவித்துக் கொள்கின்றோம் - என்றனர்.

ஆர்பாட்டத்தில் சமூகநீதிக்கான வெகுஜன அமைப்பினர், இலங்கை ஆசிரியர் சங்க உறுப்பினர்கள்,தேசியகலை இலக்கிய பேரவையினர்,புதிய சிந்தனை பெண்கள் அமைப்பு உட்பட பொதுஅமைப்புக்கள் பொது மக்கள், கலந்துகொண்டனர். (அ)

# கல்வி உரிமையை காக்க நேற்று தலவாக்கலையில் போராட்டம்

கொழும்பு, ஜூலை 18

சேர் ஜோன் கொத்தலாவ தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சட்டமூலத்தை மீள பெறுமாறு வலியுறுத்தியும், அரசாங்கத்தின் ஒடுக்குமுறை செயற்பாடுகளுக்கு எதிராகவும் ஜே.வி.பியினர் நேற்று தலவாக்கலை நகரில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஜே.வி.பியின் அரசியல் செயற்பாட்டாளர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் இளைஞர்கள் இதில் பங்கேற்றிருந்தனர்.

இலவசக் கல்வி பெறும் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என வலியுறுத்திய போராட்டக்காரர்கள், கல்வியை தனியார் மற்றும் இராணுவ மயப்படுத்துவதற்கு இடமளிக்கக்கூடாது எனவும் கோசமெழுப்பினர்.

அத்துடன், நாட்டில் நிலவும் உரத்தட்டுப்பாட்டால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, அவர்களுக்கு உரம் விநியோகிக்கப்பட வேண்டும் என குரல் எழுப்பிய ஜே.வி.பியினர், அத்தியாவசியப் பொருட்கள் உட்பட ஏனைய பொருட்களின் விலையை உடன் குறைக்குமாறும் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்தனர்.

அதேவேளை, மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான ஆயிரம் ரூபா சம்பள உயர்வு உரிய வகையில் இடம்பெறவேண்டும். அவர்களின் தொழில்சார் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் எனவும் திட்டவட்டமாக அறிவித்தனர்.

# மன்னாரில் ஆடிப்பிறப்பு கொண்டாட்டம் நேற்று

மன்னார், ஜூலை 18

'ஆடிப்பிறப்பில் தமிழர் நாம் கூடிக்கொண்டாடிக் குதூகலிப்போம்' எனும் கருப்பொருளில் மன்னாரில் ஆடிப்பிறப்பு கொண்டாட்டம் நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது.

மன்னார் அன்னை இல்லத்தில், மாவட்டச் செயலகம் மற்றும் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஆகியவை இணைந்து குறித்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

இதில் மாணவர்களின் சிறப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன. மேலும் மாவட்ட அரசாங்க அதிபரினால், மாணவர்களுக்கு பரிசுப் பொருட்கள் வழங்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.





# சர்வதேசத்தை வளைக்க முன் தமிழர் மனங்களை பஸில் வெல்லவேண்டும்

## மனோ கணேசன் எம்.பி வேண்டுகோள்



கொழும்பு, ஜூலை 18

பஸில் ராஜபக்ஷ, சர்வதேசத்தை வளைக்க முன் தமிழ் பேசும் மக்களின் மனங்களை வெல்லவேண்டும் . அத்துடன், சர்வதேச சமூகமும் தமிழர்களின் தோள்களில் சவாரி ஓடக்கூடாது என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

புதிய நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ, இலங்கையில் உள்ள அமெரிக்க, இந்திய, சீன, ரஷ்ய, ஐரோப்பிய ஒன்றியம், ஜேர்மனி, பிரிட்டன் தூதுவர்களை அவசர அவசரமாக சந்தித்துள்ளார். நம் நாட்டு பொருளாதார வளர்ச்சிக்கு வெளிநாட்டு முதலீடுகள் தேவை என்று கூறுகிறார். அதற்கு இந்த தூதுவர்கள் உதவ வேண்டுமெனவும் கூறுகிறார். புதிய நிதியமைச்சரின் கருத்து சரிதான்.

ஆனால், சர்வதேச நாடுகளை வளைத்து போட, நிதியமைச்சரை மாற்றி, தூதுவர்களை சந்தித்து கோரிக்கை விடுப்பது மாத்திரம் போதாது. இலங்கை அரசாங்கம் தனது, "போலி தேசியவாத" கொள்கையை மாற்ற வேண்டும். இனவாதத்தை கைவிட்டு, தமிழ், முஸ்லிம் மக்களின் நம்பிக்கையை பெறவேண்டும்.

அதேபோல் இலங்கை அரசாங்கம், உலக நாடுகளுக்கு தந்துள்ள தேசிய ஒருமைப்பாடு, மனித உரிமைகள், சட்டத்தின் ஆட்சி ஆகியவை பற்றிய உறுதிமொழிகளைக் காப்பாற்றுகின்றதா என்பதை, இந்த அமெரிக்க, இந்திய, சீன, ரஷ்ய, ஐரோப்பிய ஒன்றியம், ஜேர்மனி, பிரிட்டன் தூதுவர்களும் உறுதி செய்து விட்டு, இலங்கை அரசுக்கு உதவ முன்வர வேண்டும்.

அதைவிடுத்து விட்டு, தங்கள் சொந்த நலன்களுக்காக, தமிழ் பேசும் மக்களின் தோள்களில் சவாரி ஓட இனியும் முனையக்கூடாது. உங்களை நம்பி பிரயோசனம் இல்லை என்ற நிலைக்கு தமிழ் மக்களை தள்ளி விடவேண்டாம். சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட சண்டைக்காரன் காலில் விழலாம் என, இலங்கை அரசாங்கத்துடன் சேர்ந்து "வன் பெல்ட்-வன் ரோட்" என்ற சீனாவின் பட்டுப்பாதையில் தமிழ் மக்களும் பயணிக்கும் நிலைமையை உருவாக்கிடவேண்டாம்.

புதிய துடைப்பான் நன்றாக துடைப்பது போன்று, புது நிதி மந்திரி பதவிக்கு வந்தது முதல் நன்றாக சுறுசுறுப்பாக இயங்குகிறார். விளைவுகள் இன்னமும் வெளிவரவில்லை என்றாலும், பஸில் ராஜபக்ஷ அரசுக்குள் ஒரு கிளர்ச்சியை ஏற்படுத்தி உள்ளார்.

ஜனாதிபதி, பிரதமர் ராஜபக்ஷ சகோதரர்களின் தோல்வியால் துவண்டு போயிருந்த இலங்கை பொதுஜன பெரமுன அரசாங்கத்துக்கு பஸில் ராஜபக்ஷதான் இப்போது கிடைத்துள்ள ஒரே துருப்பு சீட்டு என நன்றாக தெரிகிறது.

இவரது மூத்த சகோதரர் பிரதமர் முன்னாள் நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ தனது கையில் எப்போது ஒரு மந்திரப் பந்தை வைத்து உருட்டிக் கொண்டே இருப்பார். கடைசியில் அந்த மந்திரப் பந்து சரியாக வேலை செய்யவில்லை எனத் தெரிகிறது. அது சரியாக வேலை செய்து இருந்தால், அவர் பதவி விலகி அந்த இடத்துக்கு பஸில் வர வேண்டிய தேவை ஏற்பட்டு இருக்காதே.

இப்போது புதிய நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ, ஏறக்குறைய எனக்கு எதிரிலே தான் ஆளும்தரப்பில் அமர்ந்துள்ளார். அலாவுதீனின் அற்புத விளக்கை, பஸில் தனது கையில் வைத்திருக்கின்றாரா என நான் அவர் பாராளுமன்றம் வந்த நாளன்று தேடி பார்த்தேன். அலாவுதீனின் அற்புத விளக்கை காணோம். தனது அலுவலகத்தில் வைத்திருக்கிறாரோ தெரியவில்லை.

'அண்டா-கா-கசம், அபூ-கா-கசம்-திறந்திடு சீசே' என்ற மந்திரத்தை சொல்லி, கொள்ளையன் அபு ஹூசைனின் ரகசிய குகையை திறந்து, தங்கத்தையும், வைரத்தையும், செல்வத்தையும், நம்ம அலிபாபா எடுத்து தந்ததை போல, நம்ம புதிய நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் மக்களுக்கு மந்திரத்தால் நிவாரணம், விலைகுறைப்பு, சம்பள உயர்வு, இறக்குமதி கட்டுப்பாடு தளர்வு, அனைவருக்கும் எல்லையில்லா தடுப்பூசி என்று வரிசையாக எடுத்து விடுவார் என எதிர்பார்த்தேன்.

அவர் தற்போது, அமெரிக்க, இந்திய, சீன, ரஷ்ய, ஐரோப்பிய ஒன்றியம், ஜேர்மனி, பிரிட்டன் தூதுவர்களை சந்தித்து ஒத்துழைப்பை கோரி உள்ளார். நிறைய முதலீடுகளையும், கடன்களையும், நன்கொடைகளையும், நிதியமைச்சர் கோரினார் என எனக்கு ஒரு மேற்குலக வெளிநாட்டுத் தூதுவர் கூறினார். நல்ல விடயம்தான். எப்படியாவது மக்களுக்கு நல்லது நடந்தால் சரி. எமது அரசாங்கம் விரைவில் வரும். அதுவரை கஷ்டத்தை பொறுத்துக்கொண்டு இருங்கள் என நான் அரசியல் நோக்கில் பேசமாட்டேன். எங்கள் மக்களுக்கு நன்மை கிடைத்தால், நாம் உள்ளே இருந்தாலும், வெளியே இருந்தாலும், அது நமது அரசாங்கம்தான்.

ஆனால், புதிய நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவும், அவரது ஜனாதிபதி சகோதரரும், பிரதமர் சகோதரரும், தமது கொள்கைகளை மாற்ற வேண்டும். தொட்டதுக்கு எல்லாம் போலி தேசியவாதம் பேசி, நாடு பறி போகிறது என்று கூறி, சிங்கள இனம், பௌத்த மதம் ஆகிய இரண்டையும் இழுத்து விடும் பழக்கத்தை கைவிடவேண்டும். தேசிய ஒருமைப்பாடு, மனித உரிமைகள், சட்டத்தின் ஆட்சி ஆகியவை தொடர்பில் உலகத்துக்கு கொடுத்த உறுதிமொழிகளை நிலை நாட்ட முன் வர வேண்டும். தமிழ், முஸ்லிம், இந்து, இஸ்லாமிய, கத்தோலிக்க இலங்கை மக்களின் மனங்களை வெல்ல முயல வேண்டும். அப்படி செய்தால், இலங்கை நாட்டை நோக்கி முதலீடுகள் குவியும். செல்வம் குவியும். வானளாவ வளம் குவியும் - என்றார்.

(அ)

# பருத்தித்துறை வர்த்தகர்கள் 6 பேருடன் தொடர்புடைய 70 பேரை காணவில்லை

## அவர்களை சுயதனிமைப்படுத்த சுகாதாரத்துறை தேடுதல்

யாழ்ப்பாணம், ஜூலை 18

பருத்தித்துறை நகர் வர்த்தக தொகுதியில் கோரோனா தொற்றினால் பாதிக்கப்பட்ட 6 வர்த்தகர்கள் தலைமறைவாகிய நிலையில் அவர்களுடன் பணியாற்றிய 70 பேரைக் காணவில்லை என சுகாதாரத்துறையினர் தேடி வருகின்றனர்.

அவர்கள் சமூகத்தில் நடமாடுவதால் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும் என சுகாதாரத் துறையினர் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

பருத்தித்துறை நகரில் கொரோனா தொற்றுடன் அடையாளம் 6 வர்த்தகர்களும் புத்தளம் மற்றும் காத்தான் குடியை சேர்ந்தவர்கள்.

பருத்தித்துறை நகர் வர்த்தகத் தொகுதியில் 23 பேரிடம் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் 7 வர்த்தகர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கண்டறிப்பட்டுள்ளது.

அதனையடுத்து தொற்றாளர்களை அடையாளம் கண்டு கொவிட்-19 இடைத்தங்கல் முகாமுக்கு அனுப்பும் பணியில் சுகாதாரத்துறையினர் ஈடுபட்ட போது 6 வர்த்தகர்கள் தலைமறைவாகியுள்ளனர்.

அவர்கள் 6 பேரும் பி.சி.ஆர் மாதிரிகளை வழங்கிய நிலையில் தமது சொந்த ஊரான புத்தளம் மற்றும் காத்தான் குடிக்குச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அவர்களிடம் பணியாற்றியவர்களை சுய தனிமைப்படுத்த சென்றபோது அவர்களும் தலைமறைவாகியுள்ளனர்.

அவ்வாறு சுயதனிமைப் படுத்துவதற்றாக 70 பேரின் விவரங்களுடன் சுகாதாரத் துறையினர் பொலிஸாரின் உதவியை நாடியுள்ளனர்.

இதேவேளை, தனிமைப் படுத்தல் சட்டத்தை மீறிய குற்றத்துக்கு குறைந்தது ஒரு ஆண்டு சிறைத் தண்டனையும் 10 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் விதிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# மூன்று பிள்ளைகளின் தந்தை பஸ் மோதியதில் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 18

கலஹா பிரதேச வைத்திய சாலைக்கு அண்மித்த பகுதியில் வைத்து நேற்று காலை பஸ் மோதியதில் மூன்று பிள்ளைகளின் தந்தையொருவர் (வயது - 54) பலியாகியுள்ளார்.

கலஹா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உட தெல்தொட்ட பகுதியில் இருந்து, கண்டி கல கெதர பகுதியிலுள்ள தொழிற்சாலைக்கு ஆட்களை ஏற்றிச் செல்லும் பஸ்ஸே அவர் மீது மோதியுள்ளது.

கலஹா பிரதேச வைத்திய சாலைக்கு அண்மித்த பகுதியில் உள்ள பிரதான வீதியிலேயே நேற்று காலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீதியில் பயணித்துக்கொண்டிருந்த குறித்த நபர்மீது பஸ் மோதிய பின்னர், அவர் உடனடியாக வைத்திய சாலைக்கு கொண்டுசெல்லப்பட்டார். எனினும், சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தார்.

பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். கலஹா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் கொத்தலாவல பல்கலையும் வரும்

சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தை, பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு சட்டத்தின் கீழ் கொண்டு வருவதற்கு உள்ள தடைகள் நீக்கப்படும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பௌத்த ஆலோசனை சபை, 11ஆவது தடவையாக நேற்று முன் தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஒன்றுகூடியபோதே, ஜனாதிபதி இதுபற்றித் தெரிவித்தார்.

நாட்டின் எதிர்காலத்துக்காக மேற்கொள்ளப்படும் கொள்கை சார்ந்த தீர்மானங்களுக்குச் சிலர் எதிர்ப்புத் தெரிவித்து வருவது, எதிர்காலத் தலைமுறைக்குச் செய்யப்படும் பாரிய அநீதியாகும்.

கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகமானது, 40 வருட காலமாக நாட்டுக்குத் தேவையான பெரும் எண்ணிக்கையான கல்விமான்களை உருவாக்கியுள்ளது. உயர்தரப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளுடன் சித்தியடைகின்ற மாணவர்கள்கூட, கொத்தலாவல பல்கலைக்கழகத்தைத் தங்களது உயர்க் கல்விக்காகத் தெரிவு செய்வதற்கு அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்" என்றும், ஜனாதிபதி குறிப்பிட்டார்.

உயர் கல்விக்காக தமது பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்புவதன் மூலம், நாடும் பெற்றோர்களும் இழக்க வேண்டி ஏற்படும் பாரிய தொகையைச் சேமிக்க வேண்டுமானால், உயர்ந்த தரம் வாய்ந்த இத்தகைய பல்கலைக்கழகங்கள் நாட்டில் உருவாக்கப்படவேண்டியது அவசியம்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சட்டத்தில் உள்ள தடைகளை அகற்றி, கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தை அதன் கீழ் கொண்டு வருவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

# ஓகஸ்ட் 1 தொடக்கம் மாகாணங்கள் இடையே பொதுப் போக்குவரத்துச் சேவைகள் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 18

அத்தியாவசிய மற்றும் அத்தியாவசியமற்ற பிரிவுகளாகப் பிரிக்காமல் ஓகஸ்ட் முதலாம் திகதி தொடக்கம் மாகாணங்களுக்கு இடையேயான பொது போக்குவரத்து சேவைகள் இடம்பெறும் என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

அதற்கேற்ப பஸ்களின் எண்ணிக்கையைக் குறைத்து எவரும் பயணிக்க முடியும் என அனுமதியளிக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

நேற்று முதல் ஓகஸ்ட் முதலாம் திகதிவரை மாகாணங்களுக்கு இடையேயான பஸ்கள் மற்றும் ரயில் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இருப்பினும், ஓகஸ்ட் 01 முதல் குறைந்த எண்ணிக்கையிலான பஸ்கள் மற்றும் ரயில்களை மீண்டும் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று திலும் அமுனுகம தெரிவித்தார்.

# தென்னாபிரிக்க கலவரம்! உண்மை பின்னணி என்ன?



**“இந்த நிலை தொடர்ந்தால் இலங்கை, மியன்மார் போன்ற நாடுகளில் வாழ்ந்த இந்தியர்களின் குடியுரிமையும், சொத்துகளும் பறிமுதல் செய்யப்பட்டு வெளியேற்றப்பட்டதைப் போல, தென்னாப்பிரிக்காவிலிருந்தும் இந்தியர்கள் வெளியேற்றப்படக் கூடும்”**

அமைதி, அகிம்சைக்குப் பெயர்போன நெல்சன் மண்டேலாவின் சொந்த ஊரான சொவெட்டோவில்கூட மிகப் பெரிய கலவரம் அரங்கேறியிருக்கிறது. முக்கிய நகரங்களில் நடைபெற்று வரும் கலவரத்தை அடக்கும் நோக்கில் தென்னாப்பிரிக்க இராணுவம் களமிறக்கப்பட்டிருக்கிறது. கலவரத்தில் ஈடுபட்ட 3000-க்கும் அதிகமானோரைக் கைது செய்திருக்கிறது தென்னாபிரிக்க காவல்துறை.

**கலவரத்துக்குக் காரணம் என்ன?**

2009 முதல் 2018 வரை தென்னாபிரிக்காவின் அதிபராக இருந்தவர் ஜேக்கப் ஷூமா. இவர் கடந்த வாரத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். தென்னாபிரிக்காவிலுள்ள குவாஸூலு நடால் (KwaZulu-Natal) மாகாணத்தில் பிறந்த ஷூமா, ஸூலு (Zulu) இனத்தைச் சேர்ந்தவர். ஹஸூலு இனத்தைச் சேர்ந்தவர்கள் இனவெறியால் பொருளாதார ரீதியாகத் தாழ்த்தப்பட்டிருக்கிறார்கள்“ என்ற வாதத்தை முன்வைத்தவர் ஷூமா. அதிபர் பதவிக்கு வந்த பின்னர், அவர் வாழ்ந்த பகுதியைச் சுற்றி பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டார். இதனால் ஷூமாவுக்கு நடால் மாகாணத்தில் ஆதரவாளர்கள் அதிகம். குறிப்பாக அங்கிருக்கும் இளைஞர்கள் ஷூமாவின் பக்கம் நிற்கின்றனர். ஷூமாவை விடுதலை செய்ய வேண்டுமென்ற கோரிக்கையோடு வீதிகளில் இறங்கிப் போராடத் தொடங்கினர் அவரின் ஆதரவாளர்கள்.

ஷூமாவின் சொந்த மாகாணமான குவாஸ/லு நடாலில்தான் முதலில் போராட்டம் தொடங்கியது. அந்தப் போராட்டங்கள் தற்போது கலவரங்களாக மாறியிருக்கின்றன. தென்னாபிரிக்காவிலுள்ள வணிக வளாகங்கள், கடைகளிலுள்ள டி.வி, பிரிட்ஜ், ஏசி, உணவுப் பொருள்கள் உள்ளிட்ட பொருள்களைச் சூறையாடிச் செல்கின்றனர் கலவரக்காரர்கள். கடைகள் முழுவதுமாக சூறையாடிய பின்னர் அந்தக் கடைகளைத் தீயிட்டும் கொளுத்தி விடுகின்றனர். ஏ.டி.எம் மையங்கள், உணவகங்கள் உள்ளிட்டவற்றை அடித்து நொறுக்கி வருகின்றனர்.

வணிக வளாகங்களுக்குத் தீ வைக்கப்படும் காரணத்தால், அந்த வளாகங்களுக்கு மேல்தளத்தில் வசிக்கும் மக்கள், அங்கிருந்து தப்பியோடி உயிரைக் காத்துக் கொள்கின்றனர். அப்படித் தப்பி ஓடும்போது ஏற்படும் கூட்ட நெரிசலில் பலரும் உயிரிழந்திருக்கின்றனர் என்று சொல்லப்படுகிறது. இதுவரை தென்னாபிரிக்காவில் பல நூறு கோடி ரூபாய் மதிப்பிலான பொருட் சேதம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இதே நிலை தொடர்ந்தால் கடுமையான பொருளாதார நெருக்கடியும், உணவுப் பஞ்சமும் தலைவிரித்து ஆடும் என்று எச்சரித்திருக்கிறார்கள் அங்குள்ள அமைச்சர்கள்.

**ஷூமா கைதுக்கு என்ன காரணம்?**

இவ்வளவு வன்முறைக்கும் ஷூமா கைது செய்யப்பட்டமைதான் காரணம் என்றால், ஷூமா கைது செய்யப்பட்டதற்கு என்ன காரணம் என்ற கேள்வியும் சேர்ந்தே எழுகிறது. அந்தக் கேள்விக்கு விடையாக ஒரு சில விஷயங்கள் சொல்லப்படுகின்றன. ஷூமா தனது ஆட்சிக் காலத்தில் ஆயிரம் கோடி ரூபாய் வரை ஊழல் செய்திருக்கிறாரென குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டன. இதன் காரணமாகத்தான் தனது அதிபர் பதவியை இராஜினாமா செய்திருக்கிறார் ஷூமா. தொடர்ந்து இது தொடர்பாகத் தொடரப்பட்ட வழக்கில் பலமுறை நேரில் ஆஜராக சொல்லியும், நீதிமன்றப் பக்கமே தலைகாட்டவில்லை ஜூமா. இதனால், நீதிமன்ற அவமதிப்பு என்று சொல்லி, அவருக்கு 15 மாதகால சிறை தண்டனை வழங்கியது தென்னாப்பிரிக்க நீதிமன்றம்.

**திசைமாறிய போராட்டம்!**

முதலில் ஷூமா விடுதலையை முன்னிட்டு தொடங்கப்பட்ட இந்தப் போராட்டம், தற்போது வேறு திசை நோக்கி மாறியிருக்கிறது. தென்னாபிரிக்காவில் கொரோனா பெருந்தொற்றுக்கு முன்பாகவே வேலைவாய்ப்பின்மை, வறுமை உள்ளிட்ட பிரச்னைகள் இருந்து வந்தன. கொரோனாவுக்குப் பின்னர், இந்தப் பிரச்னைகள் விஸ்வரூபம் எடுத்தன.

தென்னாபிரிக்க மக்கள்தொகையில் 46 சதவிகிதம் பேர் வேலைவாய்ப்பின்மையை எதிர்கொண்டிருக்கின்றனர். இந்த 46 சதவிகிதம் பேரில் 74.7 சதவிகிதத்தினர் இளைஞர்கள்.

கொரோனா பெருந்தொற்றையொட்டி, வேலையில்லாதவர்களுக்கு மாதந்தோறும் 350 rand ( நம் நாட்டு மதிப்பில் சுமார் 5,000 ரூபாய்) வழங்கி வந்தது தென்னாபிரிக்க அரசு. இந்த நிவாரணத் தொகையை நம்பித்தான் பல தென்னாபிரிக்கக் குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. கடந்த மார்ச் மாதத்திலிருந்து நிவாரணத் தொகை கொடுப்பதை நிறுத்தியது அரசு. இதனால் பல குடும்பங்கள் உணவில்லாமல் தவித்தன என்று சொல்லப்படுகிறது.

எனவே, முதலில் ஷூமா கைதுக்கு எதிராகத் தொடங்கப்பட்ட போராட்டங்கள், தற்போது கொரோனா பெருந்தொற்றினால் ஏற்பட்டிருக்கும் வறுமை, வேலைவாய்ப்பின்மையால் கலவரமாக மாறியிருக்கிறது என்கிறார்கள் சர்வதேச அரசியல் பார்வையாளர்கள். அதனால்தான் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பொருள்களைச் சூறையாடிச் சென்றனர் என்றும் தகவல்கள் சொல்லப்படுகின்றன.

**இந்தியர்களுக்குப் பாதிப்பு?**

முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தென்னாபிரிக்காவில் குடியேறிய இந்திய வம்சாவளியினருக்கு இந்தப் போராட்டத்தினால் கடும் பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்ற என்று அங்கிருக்கும் இந்தியர்கள் தெரிவிக்கின்றனர். ஷூமா மீது சுமத்தப்பட்டிருக்கும் ஊழல் குற்றச்சாட்டுகளுக்கும் இந்திய வம்சாவளித் தொழிலதிபர்களான குப்தா சகோதரர்களுக்கும் சம்பந்தமிருக்கிறது. இந்தக் காரணத்தால்தான் இந்தியர்களுக்கு எதிராக தென்னாபிரிக்க மக்கள் நிற்பதாகவும், இந்தியர்களைக் குறிவைத்து தாக்குதல் நடத்துவதாகவும் சொல்லப்படுகிறது.

“இந்த நிலை தொடர்ந்தால் இலங்கை, மியன்மார் போன்ற நாடுகளில் வாழ்ந்த இந்தியர்களின் குடியுரிமையும், சொத்துகளும் பறிமுதல் செய்யப்பட்டு வெளியேற்றப்பட்டதைப் போல, தென்னாபிரிக்காவிலிருந்தும் இந்தியர்கள் வெளியேற்றப்படக் கூடும்““ என்று கவலை தெரிவிக்கிறார்கள் தென்னாபிரிக்க வாழ் இந்தியர்கள்.

இந்தியர்கள் தாக்கப்படுவதற்கு மற்றொரு காரணமும் சொல்லப்படுகிறது. ஹதென்னாபிரிக்காவிலுள்ள முக்கிய நிறுவனங்களில், அதுவும் நிதி சார்ந்த நிறுவனங்களில் முக்கிய பொறுப்புகளை வகிப்பது இந்தியர்கள்தாம். அவர்களால்தான் நமக்கு போதிய வேலை வாய்ப்புகளும், பணமும் கிடைப்பதில்லை“ என்று தென்னாபிரிக்கர்கள் சிலர் கருதுகின்றனர் என்று சொல்லப்படுகிறது.

அதே நேரத்தில், “தென்னாபிரிக்காவின் வளர்ச்சியில் முக்கியப் பங்கு இந்தியர்களையே சாரும். பொருளாதார ரீதியாகத் தென்னாபிரிக்கா நாடு வளர்ந்ததற்கு முக்கியக் காரணமாக இருக்கும் இந்தியர்களை நாட்டை விட்டு வெளியேற்ற நினைப்பது சரியல்ல” என்று இந்தியர்களுக்கு ஆதரவாகவும் தென்னாபிரிக்க மக்கள் சிலர் துணை நிற்கின்றனர்.

2018இல் ஷூமாவைத் தொடர்ந்து சிரில் ரமபோசா அதிபர் பதவிக்கு வந்தார். அவர் ஆட்சிக்கு வந்த பின்னர் நடக்கும் மிகப் பெரிய சட்டம் ஒழுங்கு பிரச்னை இது. “ரமபோசா எந்தவொரு முடிவினையும் சரியாக எடுப்பதில்லை” என்கிற விமர்சனம் அவர்மீது இருக்கின்றது. கொரோனா ஊரடங்கு அறிவித்தபோது, அதை அமுல்படுத்துவதற்காக 70,000 இராணுவ வீரர்களைக் களமிறக்கினார் ரமபோசா. ஆனால், இப்போது வெடித்திருக்கும் மிகப் பெரிய கலவரத்தை கட்டுப்படுத்த வெறும் 2,500 வீரர்களை, அதுவும் தாமதமாகத்தான் களமிறக்கியிருக்கிறார் என்கிற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது.

மேலும், இராணுவ வீரர்களும், காவல்துறையினரும் துப்பாக்கிகளைக் கையில் வைத்துக் கொண்டு வேடிக்கை தான் பார்க்கிறார்கள் என்கிற குற்றச்சாட்டும் வைக்கப்படுகிறது. ஜேக்கப் ஷூமா, சிரில் ரமபோசா ஆகிய இருவருமே ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள். “கலவரம் செய்பவர்கள்மீது ரமபோசா எந்தவித நடவடிக்கையும் எடுக்காமலிருப்பதற்குக் காரணம் கட்சிப் பாசம்தானா?” என்பது போன்ற கேள்விகளும் எழுப்பப்பட்டு வருகின்றன.

ஷூமாவை விடுதலை செய்வதற்கான வாய்ப்புகள் மிக மிகக் குறைவு என்று சொல்லப்படுகிறது. வறுமை, வேலை வாய்ப்பின்மை ஆகிய பிரச்னைகளிலும் உடனடி தீர்வுகள் காண்பது கடினம். எனவே, இந்த விவகாரத்தில், சர்வதேச நாடுகள் தலையிட்டு அங்கு நடக்கும் பிரச்னைகளுக்குத் தீர்வு காண உதவி செய்ய வேண்டும் என்பதே அரசியல் நோக்கர்களின் பதிலாக இருக்கிறது.



பேராசிரியர் கே.ரீ.கணேசலிங்கம்



# சீன சார்பு கட்சி அதிகாரத்தை நோக்கி நகர்த்தப்படுகிறதா இலங்கை அரசியல்!

இலங்கை அரசியலில் சீன கம்யூனிஸத்தின் செல்வாக்கு அதீதமாக வளர்வதாக புலமையாளர் தரப்பிலும் ஊடகவியலாளர் மத்தியிலும் மற்றும் எதிர்க் கட்சிகளின் உரையாடலிலும் வெளிப்படுத்தப்படுகின்றது. அத்தகைய விம்பம் இலங்கைக்கு பொருத்தப்பாடு உடையதா? என்பதையும், அவ்வாறெனில் சீன கம்யூனிஸ பண்பாடு தற்போது அடைந்துள்ள உண்மையான வடிவத்தையும் புரிந்து கொள்ளுதல் வேண்டும். அத்தகைய புரிதலை தரும் நோக்கிலேயே இக்கட்டுரை வடிவமைக்கப்பட்டுள்ளது.

சீனா மாவோ சேதுங் தலைமையில் கார்ல் மார்க்ஸின் சிந்தனைகளை ஆசிய மயப்படுத்துவதில் வெற்றி கண்டது. ஆனால், அத்தகைய சோசலிஷ மரபு படிப்படியாக கம்யூனிஸ சர்வதிகாரத்தை மாவோ சேதுங்-இன் கலாசார புரட்சியோடு அடைந்தது. ஆனால், டெங் சியாவொப்பிங் அத்தகைய சோசலிச சர்வதிகார கட்டமைப்பை பொருளாதார நலன்கருதி சந்தை சோசலிஷ கட்டமைப்பு வடிவமாக்கினார். அது ஒரு வகையில் மேற்கு முதலாளித்துவத்திற்கு வெற்றிகரமான அம்சமாக காணப்பட்டது. இதனால், மேற்கின் சந்தையும் சீனாவின் சோசலிஷ சந்தையும் போட்டிபோடும் நிலையொன்று உலகளாவிய ரீதியில் வளர்ச்சியடைந்தது. அதுவே, உலகளாவிய அரசியல் பொருளாதார கட்டமைப்பையும் உருவாக்கியது. இத்தகைய சீன சோசலிஷ சர்வாதிகார சந்தை கட்டமைப்புடனேயே இலங்கையின் ஆட்சித்துறை நெருக்கமான உறவை வைத்துள்ளது.

இத்தகைய சீனா, இலங்கை நெருக்கத்தின் ஆரம்பப் புள்ளி சண்முகதாசனின் தலைமையில் உருவான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டமைப்போடு சீன கம்யூனிஸ்ட் கட்சி இலங்கையில் செல்வாக்கையும் பரிமாணத்தையும் பெறத்தொடங்கியது. சண்முகதாசனின் சீன சார்பு கொள்கை என்பது சீனாவின் ஆசிய மாதிரி பற்றியது. இலங்கை 1935ஆம் ஆண்டிலிருந்து சோசலிஷ அரசியல் கட்சி மரபுக்குள் ஈர்க்கப்பட்டதும் சண்முகதாசனின் புரட்சிகரமான சிந்தனைக்கு முக்கிய வேராக அமைந்திருந்தது. சண்முகதாசனின் வழிநடத்தலில் தோன்றி புரட்சிகரமான அணுகுமுறையை பின்பற்றிய ரோஹண விஜயவீர சீன கம்யூனிஸ்ட் மரபின் இரண்டாவது பரம்பரையாகக் கருதப்பட்டார். அவர் 1971இலும், 1989இலும் முன்னெடுத்த ஆயுதப்புரட்சி தோல்வியில் முடிந்தபோதும் அதுவோர் அரசியல் - பொருளாதார புரட்சிகரமான மரபை தோற்றுவித்தது.

இதன் மூன்றாவது பரம்பரையாகவும், மேற்கின் சந்தைக்கு நிகரான சர்வாதிகார சோசலிஷ சந்தை பொறிமுறைக்குமான உறவாக காணப்பட்டது. அத்தகைய உறவின் தொடக்க புள்ளி முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாக்க ஆவார். சண்முகதாசனும் ரோஹண விஜயவீரவும் ஆயுதப் போராட்டத்தினூடாக சீன அறிமுகத்தை இலங்கையில் மேற்கொண்டபோதும் ஸ்ரீமாவோ அரசாங்கம் மிதவாத அரசியலூடாக புவிசார் அரசியலை தந்திரோபாயமாக கையாளும் விதத்தில் சீனா - இலங்கை உறவைக் கட்டமைத்தார். ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவிற்கு முன்பே ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியிலிருக்கும்போது, அரிசி - இறப்பர் உடன்படிக்கை சீன இலங்கை உறவை அடையாளப்படுத்தியது என்பதுவும் மறுக்க முடியாது.

ஆனால், சோவியத் யூனியனில் சோசலிஷம் வீழ்ந்து புதிய உலக ஒழுங்கு மலர்ந்தபோது வலுவான தேசங்கள் இலங்கை போன்ற சிறிய நாடுகளைக் கைவிடும் நிலை ஏற்பட்டபோது ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் வாரிசான சந்திரிகா பண்டாரநாயக்க சீனா - இலங்கை உறவை இன்னொரு கட்டத்துக்கு எடுத்துச்சென்றார். இதுவும் முழுமையாக அரசியல் மற்றும் பொருளாதார நலனுடன் இசைவுபட்டதாக அமைந்திருந்தது.

இதன் வளர்ச்சிப்போக்கை அதிதீவிரமாகவும் நான்காவது பரம்பரை எனவும் அடையாளப்படுத்தக்கூடிய அளவிற்கு சீனா - இலங்கை உறவின் பரிணாமத்தை மிதவாத அரசியலுக்குள்ளிலிருந்த எழுச்சி பெற்ற இன்றைய பிரதமரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ தோற்றுவித்தார். இத்தகைய சீனா - இலங்கை உறவு அரசியல் பொருளாதாரமாக மட்டுமன்றி இராணுவமாகவும், கட்சி சர்வாதிகாரமாகவும் வரைமானம் எடுக்கின்ற ஒன்றாக விளங்குகிறது.

இலங்கையினுடைய அரசியல் சூழலை தனிக்கட்சி அரசியலுக்குள்ளால் நகர்த்தவும், பொது நிர்வாக இயந்திரத்தின் மீது இராணுவ செல்வாக்கை பலப்படுத்தவும் திட்டமிடுகிறது. இத்தகைய திட்டமிடல், சீன சார்பு அரசியல், பொருளாதார, இராணுவ, கட்சி பரிணாமம் என நீண்டதொரு வளர்ச்சிப்போக்கை தொடக்கி உள்ளது. இதற்கு எதிராக எழுந்துள்ள அலைகள் பலவீனமாக அமைந்திருப்பதோடு உலகளாவிய சீனாவின் அதிகார சமநிலைக்கு முன்னால் அதிக நெருக்கடிக்கும் அத்தகைய அணிகள் தள்ளப்பட்டுள்ளன.

அதுமட்டுமன்றி சீனாவை விமர்சிக்கும் அல்லது எதிர்க்கும் அணியினர்களில் பிரதானமானவர்கள் புரட்சிகர ரோஹண விஜயவீரவின் பாசறையில் வளர்ந்த விஜயவீரவின் மரணத்திற்கு பின்னர் மிதவாத அரசியலை அடையாளப்படுத்திய ஜே. வி. பியினர். ஆயினும், அவர்களின் எதிர்ப்புவாதம் முழுமையான வடிவத்தை கொண்டதா என்பது சந்தேகத்திற்குரியது. இலங் கையில் சீனாவின் காலனித்துவம் பற்றி விமர்சனம் செய்யும் ஜே. வி. பியினர் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு விழாவுக்கு வாழ்த்து தெரிவித்ததுடன் கொம்யூசிஸ்ட் கட்சியின் சாதனைகளை அங்கீகரித்தமை சந்தேகத்தை வெளிப்படுத்தி உள்ளது.

இதேபோன்றே ஐக்கிய தேசியக் கட்சியும் சீனா மீதான விமர்சனங்களை அதீதமாக கொண்டிருந்தபோதிலும் 1952 இறப்பர் - அரிசி உடன்படிக்கையில் தொடங்கி ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சி தலைவராக இருந்தபோதும் - சீனாவிற்கு அழைத்து செல்லப்பட்டபோதும் நல்லாட்சி அரசாங்கம் பதவியில் இருந்தபோது சீனா மேற்கொண்ட ஒரே சுற்று ஒரே பாதைக்கான ஆரம்ப விழாவில் கலந்து கொண்டமையும், அம்பாந்தோட்டை துறைமுகம் 99 வருடங்களுக்கு குத்தகைக்கு வழங்கும் உடன்பாட்டில் ஒப்பமிட்டதனூடாகவும் அதன் எதிர்ப்பு வாதத்தின் நம்பிக்கை பலவீனம் என்பது தெளிவாகிறது.

தமிழர் தரப்பைப் பொறுத்தவரை அது தனது தனிப்பட்ட அரசியல் நலனுக்காகவும், இந்திய - அமெரிக்க நட்புக்காகவும் வடிவமைக்கப்பட்ட தொன்றாக தெரிகிறது.

தென்னிலங்கை புத்திஜீவிகளும் பெருமளவு ஊடகப்பரப்பில் செயல்படுவோரும் சீன - இலங்கை உறவை வளர்ச்சிக்குரிய ஒன்றாகவே கருதுகிறார்கள். குறிப்பாக அத்தகைய உறவை புவிசார் அரசியலாகவும் பூகோள அரசியலாகவும் புவிசார் பொருளதாரமாகவும் கணிப்பிட்டு செயல்படுகின்றனர். இவை அனைத்தும் இலங்கைக்குரிய ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உதவுமென கருதுகின்றனர்.

அதேநேரம் ஒரு சில ஆய்வாளர்களும் ஊடகப்பரப்பினரும் நீண்ட கால நோக்கில் சீன - இலங்கை உறவு ஆபத்தானதாக அமைந்துவிடுமா? என சந்தேகிக் கின்றார்கள். ஆனால், யதார்த்தமாக நோக்கினால் இலங்கையின் ஆட்சியாளர் கள் சீன - இலங்கை உறவை நீண்ட பரிமாணமிக்கதொன்றாக உருவாக்க திட்டமிடுகிறார்கள். அதுவே, இலங்கையின் இறைமையையும் பொருளாதார செழிப்பையும் உலகளாவிய நெருக்கடியிலிருந்து மீள உதவுமென கருதுகின்றனர். இத்தகைய ஆட்சியாளர்கள் மேற்குலகத்தையும் இந்தியாவையும் கையாளும் பொறிமுறையே சீனாவின் உறவு வெற்றிகரமான முகமென கருதுகிறது.

அமெரிக்காவையும் இந்தியாவையும் கையாளும் விதத்திலேயே திருகோணமலை துறைமுகத்தையும் மேற்கு முனையத்தையும் வடக்கு கிழக்கில் இந்தியாவின் பிரசன்னத்தையும் முகாமை செய்து வருகிறது. சீனாவுடன் 99 ஆண்டு கால குத்தகைக்கு உடன்பட்ட இலங்கை ஆட்சியாளர்கள் அமெரிக்காவோடு 5 வருட குத்தகைக்கு மட்டுமே உடன்பட்டுள்ளார்கள். தென்னிலங்கை ஆட்சியார்களின் கணிப்பு சரியாக அமையுமாயின் ஏறக்குறைய 5-10 ஆண்டுகளுக்குள் இலங்கை மீதான அமெரிக்கா, இந்தியாவின் செல்வாக்கு முற்றாக நீங்கிவிடுமென கருதுகின்றது. காரணம் சீனாவும் - இலங்கையும் நிரந்தரமான நட்பு நாடு எனும் விம்பம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இலங்கையில் சீன சார்பு வளர்ச்சி நிலை என்பது ஆட்சியில் உள்ள மிதவாத அரசியல் தலைமைகளிடம் இராணுவ ரீதியிலான கட்டமைப்பையும் சர்வாதிகார ரீதியிலான கட்சி கட்டமைப்பையும் விஸ்தரிப்பதற்கான முனைப்போடு அணுகப்பட்டு வருகிறது. பொருளாதாரம் அல்லது சந்தை பொருளாதாரம் அத்தகைய விம்பத்துக்கு ஒத்துழைப்பை கொடுக்கும் அங்கமாகவே பார்க்கப்படுகிறது. இது இலங்கையில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் பொருத்தப்பாடுடைய நிலையாகும். சீனா இலங்கைக்குள் பொருளாதார ஒத்தழைப்பை முதன்மைப்படுத்த இலங்கை சீனாவுக்குள் கட்சி அரசியலையும் பொருளாதாரத்தையும் இராணுவ பரிமாணத்தையும் தேடுகின்றது

**நன்றி - அருவி**

# தடுப்பூசியை எதிர்ப்பவர்களது சந்தேகங்களுக்கு பதில் என்ன?

கட்டாயத் தடுப்பூசி பற்றிய வாதங்கள் பிரதிவாதங்களைப் பரவலாகக் கேட்க முடிகிறது. மருத்துவ வசதிகளும், தடுப்பூசிக் கொள் வனவு சக்தியும் அதிகம் உள்ள பிரான்ஸ் நாட்டிலே கூட இன்னமும் சனத்தொகை யில் அரைவாசிப் பங்கினர் ஊசி ஏற்ற முன்வரவில்லை.இதனால் தடுப்பூசி ஏற்றியோர், ஏற்றாதவர் என்ற இரண்டு வர்க்கங்கள் சமூகத்தில் உருவாகி வருகின்றன.

நாளாந்த செயற்பாடுகளுக்கு தடுப்பூசியைக் கட்டாயமாக்குவதன் மூலம் அதனை ஏற்றிக்கொள்ளுமாறு மக்கள் மீது அரசுகள் அழுத்தத்தைப் பிரயோகிக்கத் தொடங்கி உள்ளன. இதனால் தடுப்பூசி பற்றிய ஐயங்களுக்குப் பதில் கிடைக்க முன்னரே பலரும் ஊசி ஏற்றிக் கொள்ள ஆரம்பித்துள்ளனர். ஜனாதிபதி மக்ரோனின் கட்டாய சுகாதா ரப் பாஸ் திட்டத்தை எதிர்ப்போர் அதனை ”சுகாதார சர்வாதிகாரம் ("health dictatorship") என்று வர்ணிக்கின்றனர்.

அதற்கு எதிராக ஆர்ப்பாட்டங்களும் வெடித்துள்ளன. தனிமனித சுதந்திரத்தையும் தடுப்பூசியின் அவசியத்தையும் சமமாக எடைபோடுமாறு சில எதிர்க் கட்சிகள் வலியுறுத்துகின்றன. ஆனால் மருத்துவப் பணியாளர்களுக்கு மட்டுமன்றி பன்னிரெண்டு வயதுக்கு மேற்பட்ட அனைவருக்குமே தடுப்பூசி யைக் கட்டாயமாக்குவதற்கு நாட்டின் மருத்துவ அக்கடமிகள் ஆதரவு வெளியிட்டுள்ளன. ”தடுப்பூசி ஏற்றுவது ஒருவரது அரசியல் விருப்பு வெறுப்பு அடிப்படைகளில் தீர்மானிக்கின்ற விடயம் அல்ல. அது ஒரு மனிதாபிமான அடிப்படையிலான நற்பண்பு” என்று பிரபல தொற்று நோயியல் நிபுணர் ஒருவர் கூறியிருக்கிறார்.

ஆனால் ஊசி மருந்து தாராளமாக இருந்தும் ஏற்றிக் கொள்ள ஆட்கள் இல்லை என்ற நிலைமையே அண்மைய நாட்கள் வரை காணப்பட்டுவந்ததது. தற்போது கட்டாய சுகாதாரப் பாஸ் நடைமுறை அறிவிக்கப்பட்டதால் வேறு வழியின்றிப் பலரும் தடுப்பூசி ஏற்றத் தொடங்கியுள்ளனர். தடுப்பூசியை எதிர்க்கின்றவர்கள் அல்லது தடுப்பூசி எதிர்ப்புவாத இயக்கத்தினர் பிரான்ஸில் மட்டுமன்றி எல்லா நாடுகளிலும் உள்ளனர். பிரான்ஸின் சனத் தொகையில் அவ்வாறான எதிர்ப்புவாதிகளது எண்ணிக்கை ஆக மூன்று சத வீதம் மட்டும் தான். பிரான்ஸில் தடுப்பூசி ஏற்றும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஆறு மாதகாலம் கடந்துவிட்டது. ஆனால் நாட்டில் ஐம்பது வீதமானவர்கள் இன்னமும் ஓர் ஊசியைக் கூட ஏற்றிக் கொள்ள முன்வரவில்லை. அது ஏன்? அவர்கள் ஊசியை எதிர்க்கவில்லை. ஆனால் அதனை விரும்பவில்லை. அக்கறை இல்லை அல்லது அதன் மீது நம்பிக்கை கொள்ளவில்லை. அல்லது ஊசி பற்றிய மிகை அச்சங்கள். தெளி வற்ற நிலை. இவையே காரணங்களாக உள்ளன.

- **தடுப்பூசி ஏற்றியவர்களும் தொற்றால் உயிரிழக்கிறார்கள்-**
- **தடுப்பூசி ஏற்படுத்துகின்ற பக்க விளைவுகள் கொரோனா வைரஸை விட ஆபத்தானவை-**
- **தடுப்பூசியில் உள்ள மெசஞ்சர் ஆர். என். ஏ.(messenger RNA) மனித மரபணுக் குறியீட்டை (genetic code) மாற்றத்துக்குள்ளாக்கும்-**
- **தடுப்பூசியால் இன்னும் முப்பது வருடங்களில் பெரும் புற்றுநோய் அலை உருவாகும்-**
- **ஊசி போட்டவர்கள் மீண்டும் தொற்றுக்குள்ளாகி வைரஸைப் பரப்புகின்றனர்-**
- **கோவிட் தடுப்பூசி மிகக் குறுகிய காலத் தில் கண்டு பிடிக்கப்பட்டு வேகமாகப் பரீட்சிக்கப்பட்டுப் பயன்பாட்டிற்கு விடப்பட்டதால் அதன்மீது சந்தேகம்-**

தடுப்பூசிக்கு எதிரானவர்களிடம் மட்டு மன்றி, ஏனையவர்களிடமும் இவை போன்ற ஐயங்களும் கேள்விகளும் உள்ளன.சாதாரண மக்கள் ஊசி போடாமல் தவிர்ப்பதற்குக் காரணமான ஐயங்களுக்கு நிபுணர்களது விளக்கங்களை ஊடகங்கள் செவ்விகளாக வெளியிட்டு வருகின்றன.

மூத்த தொற்றுநோயியல் துறை நிபுணரும் ஜெனீவா பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடப் பேராசிரியருமாகிய Antoine Flahault சில ஐயங்களுக்கு விளக்கமளித்திருக்கிறார். தடுப்பூசியை எதிர்க்கின்ற இயக்கத்தினர் ஒருபோதும் தங்களை மாற்றிக்கொள்ளப்போவதில்லை. ஆனால் பொதுமக்களில் பெரும்பாலானோர் தங்களை நோக்கித் தாங்களே கேட்டுக்கொள்கின்ற சில நியாயமான கேள்விகளுக்கு விளக்கம் அளிக்க வேண்டியது தார்மீகக் கடமை என்று அவர் ஒப்புக் கொள்கிறார்.

**⏩ கொரோனா தடுப்பூசி மிக விரைவாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதனால் அதனை நம்ப முடியாது. இது சரியா தவறா?**

ஆம். மிக விரைவாக கண்டறியப்பட்டது என்பது உண்மையே.தொற்று நோய்க்கு மத்தியில் தடுப்பூசியை மனிதர்களில் சோதித்துப் பார்க்கின்ற நடவடிக்கைககளில் நேரத்தை மிச்சம் பிடிக்க முடிந்தது. அதாவது கிளினிக்கல் பரிசோதனைகளைச் செய்வதற்குப் பரந்த அளவில் நோயாளிகள் கிடைக்கின்ற நிலை இருந்ததால் அது விரைவாகச் சாத்தியமாகியது.

ஆபத்தான எபோலா வைரஸுக்கு (Ebola virus) தடுப்பூசி ஒன்று கண்டறியப்பட்டுள் ளது. ஆனால் அதனை மனிதர்களில் பரிசோதித் துப் பார்ப்பதற்கு குறைந் தது 30 ஆயிரம் தொற்றாளர்கள் அவசியம். அது கிடைக்காததால் தடுப்பூசி நிறைவு பெறவில்லை. எபோலா உலகளாவிய ஒரு தொற்று நோயாக இல்லை. மனிதரில் செய்கின்ற சோதனைகள் விரைவாக நிறைவு பெறுவதற்கு அந்த வைரஸ் தொடர்ந்து பரவிக் கொண்டிருக்கின்ற சூழ்நிலை அவசியம்.

**⏩ தடுப்பூசி ஏற்றியவர்கள் மீண்டும் தொற்றுக்கு இலக்காகி உள்ளனர். மருத்துவமனைகளிலும் சேர்க்கப்பட்டுள்ளனர். இது ஊசியின் வலுவின்மையைக் காட்டுகின்றது. சரியா, தவறா?**

இதற்கு நீங்கள் இஸ்ரேல் மற்றும் இங்கிலாந்து போன்ற நாடுகளில் தற்சமயம் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை அவதானித்தால் விளங்கும். டெல்டா வைரஸ் சம்பந்தப்பட்ட புதிய தொற்றலைகளை அந்த நாடுகள் சந்தித்துள்ளன. ஆனால் தொற்றாளர்களது எண்ணிக்கையையுடன் மருத்துவமனை அனுமதிகள் மற்றும் உயிரிழப்புகளை ஒப்பிட்டுப் பாருங்கள். முன்னர் போன்று இல்லை. இவ்விரு நாடுகளிலும் சனத் தொகையில் அதிகமான பங்கினர் தடுப் பூசி ஏற்றியுள்ளனர். இதற்கு மாறாக ரஷ்யாவில் நிலைமை என்ன என்று பாருங்கள். ஆக 15 வீதமானோர் மட்டுமே தடுப்பூசி பெற்றுள்ள அங்கு டெல்ரா தொற்றினால் ஒரு நாளில் கூட 700 பேர் மரணித்துள்ளனர்.

தடுப்பூசி வைரஸ் தொற்றைத் தடுக்காது விட்டாலும் நோய் நிலைமை ஆபத்தான கட்டத்துக்குச் செல்வதையும் உயிரிழப்புகளையும் தடுக்கிறது என்பது இதன் மூலம் உறுதிப்படுத்தலாம்.

**⏩ மெசஞ்சர் ஆர்என்ஏ தடுப்பூசிகள் (Messenger RNA) மனித மரபணு மூலக் கூறுகளை(genetic code) மாற்றி அமைக்குமா?**

மெசஞ்சர் ஆர்.என்.ஏ. என்பது தொற்றுக்கு காரணமான அதே கிரிமியை உடலில் செலுத்துவது தான். இன்புளுவன்சா, டெங்கு, சிக்குன்குன்யா எந்த வைரஸ் தொற்றுக்களும் மெசஞ்சர் ஆர்.என்.ஏ. போன்றவை தான். வைரஸ் கிரிமியை ஒரு நுளம்பு எப்படி உடலினுள் செலுத்துகின்றதோ அதே போன்றது தான் மெசஞ்சர் ஆர்என்ஏ தடுப்பூசியின் செயற்பாடும் ஆகும்.

மெசஞ்சர் ஆர்.என்.ஏ. சில மணி நேரங்களுக்குப் பின் னர் உடற்கலங்களில் உயிர்வாழ்வ தில்லை. நீங்கள் எதிர்த்துப் போராடுகின்ற வைரஸை விட




> **ஊசி மருந்து தாராளமாக இருந் தும் ஏற்றிக் கொள்ள ஆட்கள் இல்லை என்ற நிலைமையே அண் மைய நாட்கள் வரை காணப் பட்டுவந்ததது.தற்போது கட்டாய சுகாதாரப் பாஸ் நடைமுறை அறிவிக்கப்பட்ட தால் வேறு வழியின்றிப் பலரும் தடுப்பூசி ஏற்றத் தொடங்கியுள்ளனர்.**

**பாரிஸிலிருந்து குமாரதாஸன்**

அதற்கான தடுப்பூசி ஆபத்தா னது என்று கருதுவது எனக்கு விளங்க வில்லை.

**⏩ பைஸர் போன்ற மெசஞ்சர் ஆர்என்ஏ தடுப்பூசிகள் (Messenger RNA) புற்றுநோயை உண்டாக்குமா?**

இந்தக் கூற்றை எதிர்ப்பது கடினம். ஏனெனில் புற்றுநோயின் வெளிப்பாடு என்பது அடுத்த சில வாரங்களிலோ மாதங்களிலோ ஏற்பட்டுவிடுகின்ற ஒன்றல்ல. ஆண்டுகள் பல கடந்த அது உருவாகின்றது. அதன் பிறகே ஒரு புற்று நோய் அலையை நாங்கள் காணமுடியும்.

இன்னும் முப்பது ஆண்டுகளில் ஒரு புற்றுநோய் அலையை உலகம் எதிர் கொள்ளும் என்று நோபல் பரிசு வென்ற ஒருவர் இப்போது கூறுவதை என்னால் எப்படி மறுக்க முடியும்?

வாய்மூலம் சொட்டு மருந்தாகவோ வில்லைகளாகவோ தடுப்பூசிகளாகவோ எந்த வடிவத்திலும் நாம் உள்ளெடுக்கின்ற அனைத்து மருந்துகளுமே புற்று நோயை ஏற்படுத்தக்கூடிய ஆபத்தைக் கொண்ட வைதான். மிக உச்சமாக வளிமாசடைந் திருக்கின்ற சமயத்தில் நாம் சுவாசிக்கின்ற காற்றில் உள்ள நுண்ணிய துகள்கள் கூட புற்றுநோயை உருவாக்கும் என்பதை நாம் அறிவோம். கொரோனாத் தடுப்பூசி மட் டும் தான் புற்றுநோயை உருவாக்கும் என்று கூறுவதற்கு விசேடமாக ஆதாரம் இல்லை.

**⏩ தடுப்பூசி ஏற்படுத்துகின்ற பக்க விளைவுகள் வைரஸின் பாதிப்பை விட உயிராபத்தானவையா?**

பெரியம்மை (smallpox) தடுப்பூசியுடன் இதனை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். பெரியம்மை வைரஸ் தடுப்பூசி அதைச் செலுத்திய மில்லியன் பேரில் ஒருவரை கொல்லும் ஆபத்தைக் கொண்டிருந்தது. ஆனால் பெரியம்மை வருடாந்தம் இரண்டு மில்லியன் பேரைக் கொன்ற போது அதன் தடுப்பூசியை யாரும் கேள்விக்குட்படுத்தவில்லை. பெரியம்மை முற்றாக ஒழிக்கப்பட்டு அதன் ஆபத்து அகன்றபின்னர் பக்க விளைவுகளைக் கவனத்தில் கொண்டு தடுப்பூசியை நிறுத்தினோம்.

கொரோனா தடுப்பூசியும் ஒருவரது வயது, நோய் நிலை, தேகாரோக்கியம் என்பவற்றைப் பொறுத்து அரிதான பக்க விளைவுகளை ஏற்படுத்தலாம். ஆனால் அது எல்லோருக்கும் பொதுவான ஆபத்துக்கள் அல்ல. நாங்கள் நிலைமையைச் சமாளித்து ஆபத்துகளைக் கண்டறிந்தால் தடுப்பூசியை யாருக்கு சிபாரிசு செய்யலாம் என்பதை உறுதிப்படுத்த முடியும். எல்லா மருந்துத் தயாரிப்புகளும் பக்க விளைவுகள் கொண்டவையே. துரதிர்ஷ்டவசமாக பயனுள்ள அரியமருந்துகளிலும் எதிர்மறையாக அந்த ஆபத்துக் காணப்படுகிறது.

**⏩ நீங்கள் ஓர் ஆரோக்கியமான வாழ்க்கை முறையைக் கொண்டிருந்தால் உங்கள் உடலின் காப்பு சக்தி தானாகவே வைரஸை எதிர்த்துப்போரிட்டுப் பாது காக்கும். தடுப்பூசி அவசியம் அல்ல. இது சரியா தவறா??**

ஒருவர் ஆரோக்கியமாக இருக்கிறார் என்று தானாகவே எண்ணுவது வைரஸ் தொற்றில் இருந்து தப்பிவிட உதவாது. ஆரோக்கியமாக இருப்பவர் தீவிர சிகிச்சைக் கட்டத்தை எட்டிய பிறகு அவரது உடல் எதிர்ப்பு சக்தி மட்டுமே அவரைப் பாதுகாத்து விடாது. நோய் எதிர்ப்புச் சக்தியை கொரோனா வைரஸின் தாக்கத்தில் இருந்து பாதுகாக்கும் அளவுக்கு ஒருவர் தன்னிச்சையாக வளர்ப்பது அரிதானது. ஆனால் தொற்றாளர்களை நெருங்காமல் சமூக இடைவெளி பேணும் இறுக்கமான வாழ்க்கை முறை மூலம் ஒருவர் பாதுகாப்புப் பெற முடியும். ■

# புலமைச் சிகரம்

## ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - II

நேரம் - 45 நிமிடம்

கல்வி TV CHANNEL

❖ **சரியான விடையைத் தெரிவு செய்து கோடிடுக.**

31) சூரிய நமஸ்காரச் செயற்பாட்டின் ஒத்த படிநிலைகள்.
1) 4, 7  2) 3, 10  3) 2, 9

32) மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாட்டின் மூன்றாவது படிநிலை.
1) மலர்வு  2) திடசித்தம்  3) உடலைத்தளர்த்துதல்

33) நாம் பொது இடத்தில் கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகளில் ஒன்றல்லாதது.
1) ஏனையோருக்கு இடைஞ்சல் விளைவித்தல்.
2) முதியோருக்கு உதவுதல்.
3) பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல்.

34) தேசியக் கொடியைச் சூழவுள்ள மஞ்சள் நிறம் குறித்து நிற்பது?
1) நாட்டின் தலைவர்  2) தமிழர்  3) தேசிய ஒற்றுமை

35) தேசியக் கொடியில் குறிப்பிடப்படாத இனம்.
1) தமிழர்  2) பறங்கியர்  3) முஸ்லீம்

36) எமது நாட்டிலுள்ள உலக மரபுரிமையாக விளங்குவது.
1) சிகிரியா  2) பெருக்க மரம்  3) ஓவியங்கள்

37) இலங்கை அணி கிரிக்கெட் போட்டியில் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றிய ஆண்டு.
1) 1986  2) 1976  3) 1996

38) புதிய கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு முன்னர் அனுமதி பெறச் செல்ல வேண்டிய இடம்.
1) பிரதேச சபை  2) கிராம சேவையாளர்  3) பிரதேச செயலகம்

39) தாவரம் நீர் கனியுப்புக்களை எதனூடாகப் பெற்றுக் கொள்கின்றது.
1) இலை மூலம்  2) தண்டு மூலம்  3) வேரின் மூலம்

40) வித்துக்களுடன் உண்ண வேண்டிய உணவு வகை
1) தக்காளி  2) பாகல்  3) புடோல்

41) குந்துகாலி என அழைக்கப்படும் பறவை
1) நாகணவாய்  2) நரைப்புளுணி  3) தூங்கணாங்குருவி

42)  இவ்வுரு குறிப்பது.
1) கைப்பை  2) பூ அலங்காரம்  3) ஊசிதாங்கி

43) ஒட்டும் தன்மையுள்ள நாக்கைக் கொண்டுள்ள பிராணி
1) தவளை  2) பல்லி  3) முதலை

44) தரமான புத்தகங்களுக்கு வழங்கப்படும் தரச்சான்று
1) ISBN  2) SLS  3) ISO

45) வீடுகளில் பொருட்களை அடுக்கி வைக்கப்படும் இறாக்கைகளின் வேறு பெயர்.
1) பரண்  2) ஏந்தனம்  3) அலுமாரி

46) நீர் வளத்தைப் பாதுகாப்பதற்கு நாட்டப்படும் மரம்.
1) நாவல்  2) மருது  3) தேக்கு

47) உணவுப் பொருட்களை நியாய விலையில் பெறச் செல்ல வேண்டிய இடம்
1) சதோச  2) ஒசுசல  3) பல்பொருள் அங்காடி


48) காராமணிப்பயறு என அழைக்கப்படுவது
1) உழுந்து  2) கடலை  3) கௌபி

49) ஞானக்கீரை எனப்படுவது
1) தூதுவளை  2) கற்பூரவள்ளி  3) முடக்கொத்தான்

50) நிலக்கடலையில் அதிகளவு காணப்படும் போசணைக் கூறு
1) மாப்பொருள்  2) கொழுப்பு  3) புரதம்


51) மின்காந்தம் ஒன்றை ஆக்கத்தேவையான பொருட்கள்.
1) இறப்பர், மன்கலம், செப்பு ஆணி
2) செப்புக்கம்பி, இரும்பு ஆணி, உலர் மின்கலம்
3) மின்மணி, காந்தம், மின்கலம்

52) " சிலோன் நஷனல் ரீவ்வ் " என்னும் சஞ்சிகையில் ஆரம்பகால பிரதம ஆசிரியர்.
1) கலாநிதி ரி. பீ ஜாஜா 2) ஆதர்சி. கிளார்க்  3) கலாநிதி ஆனந்தகுமார சுவாமி

53)  படத்தில் உள்ள தையல் வகை குறிப்பது?
1) நரம்புத்தையல்  2) கம்பளித்தையல்  3) சோம்தையல்

54) "ஏரைக்கொண்டு நிலம் உழுவான் எல்லோருக்கும் உணவளிப்பான் " இது எவ்வகைப் பாடல்?
1) உழவர் பாடல்  2) அரிவி வெட்டுப்பாடல்  3) கப்பற்பாடல்

55) சிவப்பு நிறத்தையும் நீல நிறத்தையும் சேர்க்கும் போது உருவாகும் நிறம்.
1) செம்மஞ்சள்  2) ஊதா  3) கபிலம்

56)  இப்படத்தில் குறிப்பிடப்படுபவர்.
1) ஆதர். சி. கிளார்க்  2) w.w. கன்னங்கரா  3) வண. எஸ். மகிந்த

57) மருந்துக்குப் பயன்படும் மரப்பட்டை
1) ஆல்  2) வேம்பு  3) அரசு

58) இலங்கை முழுவதும் பிரித்தானியர் கைப்பற்றிய ஆண்டு.
1) 1915  2) 1815  3) 1975

59) சூடடிக்கும் இடத்தில் குல்லம் என அழைக்கப்படுவது.
1) அரிவாள்  2) கைப்பெட்டி  3) சுளகு

60) தாமரைக் கோபுரம் அமைந்துள்ள மாவட்டம்
1) அனுராதபுரம்  2) கொழும்பு  3) கண்டி

(30 புள்ளிகள்)

ஈழநாடு



# “டெல்டா” திரிபு வைரஸால் மீண்டுமொரு “கொரோனா” அலை உருவாகும் ஆபத்து!

## மக்களுக்கு சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 18

இலங்கையில்“டெல்டா“திரிபு காரணமாகமேலும்ஒருகொரோனா அலை உருவாகக்கூடும் என்றும், அது நாட்டில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் அபாயம் உள்ளது என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய தொற்று நோய் தடுப்புப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்கிரம இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.


இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது: -

”உரிய சுகாதார வழிகாட்டுதல்களைப் பொதுமக்கள் பின்பற்ற வேண்டியது அவசியமாகும்.

அவ்வாறில்லையெனில், எதிர்வரும்சில வாரங்களில்நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

தீவிர சிகிச்சைப்பிரிவில்நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்குமாயின் மரண வீதமும் அதிகரிக்ககூடிய சாத்தியங்கள் உள்ளன.

எனவே, டெல்டா வைரஸ் திரிபு குறித்து பொதுமக்கள்அவதானத்துடன் இருக்கவேண்டும்என்பதுடன்சுகாதார வழிகாட்டல்களையும் உரிய முறையில் பின்பற்ற வேண்டும்” - என்றார். (இ)



# அரச அராஜகத்துக்கு எதிரான எங்கள் போராட்டம் தொடரும்!

## விடுவிக்கப்பட்ட ஜோசப் ஸ்டாலின் சூளுரை



**கொழும்பு, ஜூலை 18**

**“இலவசக் கல்வியை இராணுவ மயப்படுத்த முயலும் அரசின் அராஜகத்துக்கு எதிரான எமது போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.”**

**- இவ்வாறு தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.**

”நியாயமற்ற முறையிலேயே நாம் தடுத்து வைக்கப்பட்டிருந்தோம். எமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராகவும், எமது விடுதலையை வலியுறுத்தியும் நாடு முழுவதும் ஜனநாயகப் போராட்டங்களை முன்னெடுத்த அனைத்துத் தரப்பினருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்” என்றும் அவர் குறிப்பிட்டார்.

”எமது பக்க நியாயங்களை மக்களுக்குத் தெரியப்படுத்திய சகல ஊடகங்களுக்கும் நன்றியைக் கூறுகின்றோம்” என்றும் அவர் மேலும் கூறினார்.

முல்லைத்தீவு - கேப்பாப்பிலவு விமானப் படை முகாமில் வலுக்கட்டாயமாகத் தனிமைப்படுத்தப்பட்டிருந்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட 16 பேரும் தனிமைப்படுத்தலில் இருந்து நேற்றுமுன்தினம் விடுவிக்கப்பட்டனர்.

அரசின் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்ட மூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, கடந்த 8 ஆம் திகதி கொழும்பில் போராட்டத்தில்ஈடுபட்ட ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்டவர்கள் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப் பட்ட போது பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

ஆனால், நீதிமன்றத்தின் அனுமதியின்றி அவர்களை வலுக்கட்டாயமாகத் தனிமைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்.

நீதிமன்ற வளாகத்தில் இருந்து பொலிஸ் பஸ்ஸில் முல்லைத்தீவுக்கு அழைத்துவரப்பட்டு, கேப்பாப்பிலவு விமானப் படை முகாமில் உள்ள தனிமைப்படுத்தல் மையத்தில் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்.

இதற்குப் பல்வேறு தரப்பினரும் எதிர்ப்புத் தெரிவித்து நாடு முழுவதும் போராட்டங்களை முன்னெடுத்தனர். ஆசிரியர் சங்கங்கள் இணையவழி கற்பித்தலைப் புறக்கணித்து தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொண்டன.

இதையடுத்து, 8 நாட்களின் பின்னர், நேற்றுமுன்தினம் மாலை அவர்கள் தனிமைப்படுத்தல் மையத்தில் இருந்து விடுவிக்கப்பட்டனர். (இ)

# மேலும் ஐந்து கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிப்பு

கொழும்பு, ஜூலை 18

நாட்டில் மேலும் 4 மாவட்டங்களைச் சேர்ந்த 5 கிராம சேகவர் பிரிவுகள் நேற்று அதிகாலை 6 மணிமுதல் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

கொரோனாப் பரவல் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, கேகாலை மாவட்டத்தின் மிஹிப்பிட்டிய கிராம சேவகர் பிரிவின் மாதெய்யாவ கிராமம் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தின் கிரியல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாட்டுவாகல தோட்ட மேற்பிரிவு தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதமுனை கிராம சேவகர் பிரிவு தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

கண்டி மாவட்டத்தின் சுதுகம்பல மேற்கு மற்றும் கிழக்கு கிராம சேவகர் பிரிவுகளின் விஹாரை வீதி, விஹாரை ஒழுங்கை, கப்பர தேவாலய வீதி, வெலமெத்த பாரகம பகுதி என்பனவும் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன. (இ)



# மேலும் 207 பேர் சிக்கினார்கள்!

கொழும்பு, ஜூலை 18.

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய மேலும் 207 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனைப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் முதல் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 50 ஆயிரத்து 391 ஆக அதிகரித்துள்ளது. (இ)


# 75 வீத பல்கலைக்கழக ஊழியர்களுக்கு ஏற்றப்பட்டது கொரோனாத் தடுப்பூசி

நாட்டில் 75 வீதத்துக்கும் மேற்பட்ட பல்கலைக்கழக கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்குக் கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது எனப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொழும்பு, களனி, ஸ்ரீஜயவர்தனபுரம், யாழ்ப்பாணம் உள்ளிட்ட பல பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்குக் கொரோனா தடுப்பூசியின்இரண்டாவது டோஸ் வழங்கப்பட்டுள்ளது எனப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார். இதனிடையே, பல்கலைக்கழக மாணவர்களுக்கான தடுப்பூசி ஏற்றும் திட்டத்தை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

முதலில் நான்காம் வருட மாணவர்களுக்கான தடுப்பூசி ஏற்றும் திட்டத்தை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த விடயம்தொடர்பில் சுகாதார அமைச்சுடன் கலந்துரையாடியுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# கொரோனா சிகிச்சை நிலையத்துக்குள் பியர் ரின்களுடன் புகுந்த இருவர் கைது!




யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ்., வட்டுக்கோட்டை கொரோனா சிகிச்சை நிலையத்துக்குள் பியர் ரின்களுடன் புகுந்த இருவர் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த இருவரையும் கைது செய்ய வட்டுக்கோட்டை பொலிஸார் ஆரம்பத்தில் பின்னடித்த நிலையில் பின்னர் அவர்கள் இருவரையும் கைதுசெய்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,


வட்டுக்கோட்டைகொரோனா சிகிச்சை மையத்தில் பருத்தித்துறை பகுதியைச் சேர்ந்தவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அவர்களுக்கு வழங்கவென பியர் ரின்களுடன் இருவர் சிகிச்சை நிலையத்துக்குள் அத்துமீறி நுழைந்துள்ளனர்.

அவர்களை அங்கிருந்தவர்கள் மடக்கிப் பிடித்துள்ளனர். அவர்களைப் பொலிஸாரிடம் கையளித்த போதிலும், அவர்களுக்குக் கொரோனாத் தொற்று இருக்கும் என அச்சம் காரணமாக பொலிஸார் அவர்களைக் கைதுசெய்வதற்கு ஆரம்பத்தில் பின்னடித்தனர். பின்னர் அவர்களைக் கைதுசெய்து பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர்.

இதேவேளை, கடந்த வாரமும் இருவர் வெற்றிலைகளுடன் குறித்த சிகிச்சை நிலையத்துக்குள் அத்துமீறி நுழைந்தபோதும் அவர்களை மடக்கிப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைக்கமுற்பட்ட போதிலும் அவர்களைப் பொலிஸார் கைது செய்யப் பின்னடித்தமையால் அவர்கள் அன்றைய தினம் விடுவிக்கப்பட்டனர்.

குறித்த இருவரும் அன்றைய தினம் வெற்றிலைகளுடன் கஞ்சா போதைப்பொருளைக் கொண்டு வந்திருக்கலாம் எனும் சந்தேகம் அங்கிருந்தவர்களுக்கு ஏற்பட்டிருந்தமை என்பது குறிப்பிடத்தக்கது. (இ)




# அச்சத்தை தூண்டும் கோவிட் மூன்றாம் அலை: மத்திய அரசின் செயல்திறன் எத்தகையது?



கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பில் பிதமருடனான மாநில முதலமைச்சர்களின் இணையவழி மாநாடு நேற்று முன்தினம் நடைபெற்றபோது தமிழ்நாடு முதலமைச்சரும் அவரது குழாத்தினரும் அதில் பங்குபற்றினர்.

கோவிட் மூன்றாம் அலையைப் பற்றிய அச்சம், இந்தியாவின் மருத்துவ நிர்வாகிகளை உலுக்கிக்கொண்டிருக்கிறது. இந்திய ஊடகங்களின் முதல் பக்க செய்தியாக அது வெளிவரத் தொடங்கியிருக்கும் இந்த காலகட்டத்தில், தமிழ்நாட்டுக்குத் தடுப்பூசிகள் ஒதுக்கிய தில் நரேந்திர மோடி தலைமையிலான அரசாங்கம் பாரபட்சம் காட்டியிருப்பது குறித்த குற்றச்சாட்டுக் கள் தொடர்கின்றன. மத்திய சுகாதார அமைச்சகம், வைரஸைக் கட்டுப்படுத்துவதில் செயல் திறனற்று இருக்கிறது என்பதையோ, மிக முக்கிய மான ஒரு நல்வாழ்வு தொடர்பான விஷயம்கூட அரசியலாக்கப் படுகிறது என்பதையோ இது காட்டுகிறது. இதில், இரண்டாவது உண்மையல்ல என்றே நான் நம்ப விழைகிறேன். ஏனென்றால், தொடர்ந்து வருடக் கணக்காக உருமாறிக்கொண்டிருக்கும் இந்த வைர ஸுக்கு எதிரான போரில் வெற்றி பெறுவதில் பிரத மர் முனைப்போடு இருக்கிறார். இன்னொரு புறம், உலகளாவிய அறிவியல் சமூகம் முரண்கள் நிறைந்த இருளடைந்த பாதையாக இருக்கிறது. ஒரு நாள், ஒரு முக்கிய விஞ்ஞானி நம்பிக்கையூட்டக்கூடிய, உற்சாகம் தரக்கூடிய ஓர் அறிவிப்பை வெளியிடுகிறார். மறுநாளே, எங்கோ தொலைவில் இருக்கக்கூடிய ஓர் ஆய்வகத்தைச் சேர்ந்த ஒரு விஞ்ஞானி அதற்கு நேர்மாறாக எதையாவது அறிவிக்கிறார். மேலை நாட்டு ஆய்வாளர்களோ சீனப் பெருஞ்சுவரைக் கடந்து வூஹான் ஆராய்ச்சியகத்தில் அகழ்வாராய்ச்சி செய்து, எப்படியாவது கோவிட் ரகசியங்களைப் பெற்றுவிடவேண்டும் என்று முயற்சி செய்துவருகிறார்கள்.

போதுமான அளவில் தடுப்பூசிகள் ஒதுக்கப்பட வில்லை என்பதைப் பற்றிய சமீபத்திய வெளிப்பாடு, வெள்ளிக்கிழமை நடந்த முதலமைச்சர்கள் கூட்டத்தில் தெரிந்தது. தமிழ் நாடு, ஆந்திரப்பிரதேசம், கர்நாடகா, ஒரிஸா, மகாராஷ்டிரா, கேரளா ஆகிய ஆறு மாநிலங்களில் கோவிட் தொற்று எண்ணிக்கை தொடர்ந்து அதிகமாகவே இருப்பதால், அந்த மாநில முதல்வர்களோடு பிரதமர் மோடி இணையவழியில் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். அப்போது, தமிழ்நாட்டின் மக்கள்தொகைக் குப் பொருத்தமான எண்ணிக் கையில் தடுப்பூசிகள் ஒதுக்கப் படவில்லை என்றும், இதை விடக் குறைந்த மக்கள் தொகை உள்ள மாநிலங்களுக்கு அதிக தடுப்பூசிகள் தரப்படுகின்றன என்றும் ஸ்டாலின் சுட்டிக் காட்டினார். செப் டம்பர் இறுதியில் வரப்போகும் மூன்றாம் அலைக்கு முன் அனைவருக்கும் தடுப்பூசி தரப்படவேண்டும் என்பதால் ஒரு கோடி தடுப்பூசிகளை அவர் கேட்டிருந்தார். ஆனால், அது கண்டுகொள் ளப்படவில்லை. அந்த சந்திப்பில் ஸ்டாலின் இரண்டு முக்கியமான விஷயங்களை முன் வைத்தார் - தமிழ்நாட்டில், முன்பு மத்திய அரசு தந்த தடுப்பூசிகளில் கிட்டத்தட்ட 6% வீணாகியிருந்தது. ஆனால், இப்போது தடுப்பூசிகள் வீணாவது முற்றிலும் தவிர்க்கப் பட்டு விட்டது என்று அவர் தெரிவித்தார்.

தடுப்பூசிகளின் செயல்திறன் பற்றிய பொதுமக்களின் விழிப்புணர்வு அதிகரித்திருப்பது உண்மைதான். பல ரும் தடுப்பூசி மையங்களுக்கு வந்தபடியே இருக் கிறார்கள். ஆனாலும், தடுப்பூசியின் செயல்திறன் மட்டுமல்லாமல், தடுப்பூசி போட்டுக் கொள்வதால் ஆபத்துகள் வராது என்பதையும் மக்களுக்கு எடுத்துச் சொல்வதில் நாம் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருக்கிறது. கல்வி யறிவறிவற்றவர்கள், நகரத்தில் வசிக்கும் ஏழை மக்கள், கிராமத்து மக்கள்போன்ற பலரும் நடிகர் விவேக் தடுப் பூசியால் இறக்கவில்லை என்ற மருத்துவர்களின் முடிவை நம்ப மறுக்கிறார்கள். படித்தவர்கள் உட்பட பலர் முகக்கவசம் அணிவதில்லை, தனிமனித இடை வெளியைப் பின்பற்றுவதில்லை. நவராத்திரி மற்றும் தீபாவளி சமயங்களில் இது இன்னும் மோசமாகும். ”சமூகப் பொறுப்பற்ற தன்மை” அதிகரித்து வருகிறது என்று ஒரு மனநல மருத்துவர் கூறியதாக நான் படித்தது நினைவுக்கு வருகிறது. முகக்கவசம் அணிவது, தனிமனித இடைவெளியைப் பின்பற்றுவது உள்ளிட்ட கோவிட் நெறிமுறைகளை மக்கள் அலட்சியப்படுத்தி மீறுவதற்கு இதுதான் காரணம் என்று அவர் கூறுகிறார். இந்த நெறிமுறையைப் பின்பற்றாமல் இருப்பதில் பெரிய ஆபத்து இருப்பதை மக்கள் ஏற்க மறுக்கிறார்கள் என்கிறார் மனித நடத்தை மற்றும் அதுசார்ந்த அறிவியல் கழகத்தின் இயக்குநர் நிமிஷ் தேசாய். மலைவாசஸ்தலங்களுக்கு செல்வதற்குத் தயாராக பெரிய வரிசையில் கார்கள் காத்துக்கொண்டிருப்பதை சுட்டிக்காட்டும் அவர், ”ஆபத்து பற்றிய புரிதல் ஒன்று எல்லா கலாசாரங்களிலும் வந்திருக்கவேண்டும். ஓர் அச்சுறுத்தல் எந்த அளவுக்கு இருக்கிறது, அதைப் பொறுத்து எந்த அளவுக்கு தங்களின் வாழ்க்கை முறை மாற்றிக்கொள்ளப்பட வேண்டும் என்பதையே அது குறிக்கிறது” என்றார்.

டெல்லியிலிருந்து போதுமான தடுப்பூசிகள் தரப்படவில்லை என்பதாலேயே அரசு தடுப்பூசி போடும் எண்ணிக்கையை அதிகரிக்காமலும் நெறிமுறைகளைப் பின்பற்றாதவர்களைத் தடுக்காமலும் இருக்கிறது என்று சந்தேகிக்கிறேன். வெள்ளிக்கிழமை சந்திப்பில் பிரதமர் அளித்த வாக்குறுதிகளுக்குப் பிறகு இந்த நிலை மாறலாம்.

## “நீட” தேர்வில் பா. ஜ. க. வுக்கு எதிரான நீதிமன்ற தீர்ப்பு

தமிழக இளைஞர்களிடையே பரபரப்பாகப் பேசப்படும் “நீட்“ தேர்வு விவகாரம் பற்றியும் இந்த சந்திப்பில் ஸ்டாலின் பேசினார். மத்திய அரசின் தேசிய தேர்வாணயத்தால் நடத்தப்படும் தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு (நீட்), நாடு முழுவதிலும் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கான தேர்வு. கோவிட் வைரஸால் பள்ளிகளும் கள்லூரிகளும் தொடர்ந்து மூடப்பட்டிருக்கும் நிலையில், நீட் போன்ற தேசிய நுழைவுத்தேர்வுகளை நடத்துவது, வைரஸ் பரவலை அதிகரிக்கலாம் என்று அவர் சுட்டிக்காட்டி னார். கோவிட் அச்சுறுத்தல் காரணமாக நீட் தேர்வு ரத்து செய்யப்பட வேண்டும் என்று பல மாநில அரசுகள் கேட்டுக்



- பகவான் சிங் - தமிழகத்தின் சிரேஷ்ட பத்திரிகையாளர்

கொண்ட போதும், செப்டம்பர் 12ஆம் திகதி நீட் தேர்வு நடக்கும் என்று மத்திய அரசு முடிவெடுத் திருக்கிறது.

“ஈழநாடு“ வாசகர்களுக்கு நீட் தேர்வு பற்றி விளக்க வேண்டுமானால், மருத்துவக் கல்வியில் தரத்தை உயர்த்தி, ஊழலைக் குறைப்பதற்காகவும், தகுதியை சீராக்குவதற்காகவும் தேசிய தேர்வாணையம் நடத்தும் பொது தகுதித் தேர்வு இது. இந்த நோக்கம் நிறைவேறியதா இல்லையா என்பது விவாதத்திற்குரியது. ஆனால், வறுமையால் வாடும் குடும்பங்கள் மற்றும் கிராமப்புறங்களைச் சேர்ந்த மாணவர்கள், தமிழ்வழியில் கல்வி கற்ற மாணவர்கள் ஆகியோர் ஆங்கில வழியிலும் மத்திய கல்விப் பள்ளிகளிலும் படித்த நகர்ப்புற மாணவர்களோடும், இதற்காக தனி பயிற்சிக்கு செல்ல முடிந்த பணக்கார மாணவர்களோடும் போட்டிபோட வேண்டியிருந்தது. அது, கடினமாக இருந்தது. மாநிலக் கல்வியின் தரத்தை உயர்த்தாமல் இருந்த மாநில அரசு, இந்த மாணவர்களின் கஷ்டத்தை மேலும் அதி கப்படுத்தியது. 12 ஆண்டுகளுக்குப் பிறகே 2019ஆம் ஆண்டில் பாடத்திட்டத்தின் தரம் உயர்த்தப்பட்டது.

அஇஅ.தி.மு.கவின் தலைவர் ஜெயலலி தாவின் ஆட்சிக்காலத்திலும் நீட்டுக்கு எதி ராகத் தமிழக அரசு போராடி வந்தது. கிரா மப்புற மற்றும் ஏழை மாணவர்களுக்கான சமமான களத்தை அது பறிக்கிறது என்று குற்றம் சாட்டப்பட்டது. தவிர, பட்டிய லின சாதிகள், பட்டியலினப் பழங்குடியி னர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கான இட ஒதுக்கீட்டுக்கும் நீட் தேர்வு எதிரானது என்று சொல்லப்பட் டது. மேலும், கல்வியை மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளின் கூட்டு நிர்வாகத்தைக் குறிப்பிடும் ஒருங்கியல் அதிகாரப் பட்டியலில் இருந்து, மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும். ஏனென்றால், இந்தியா போன்ற பல சமூகப் பொருளாதாரக் கட்டமைப்புகள், மாநில மொழிகள், கலாசாரங்கள் உள்ள ஒரு நாட்டில், தங்கள் மக்களுக்கு ஏற்ப ஒரு கல்வித்திட்டத்தை அந்தந்த மாநிலங்கள் வகுத்துகொள்வதே சிறந்ததாக இருக்கும். அப்போது தான் விளிம்புநிலை மக்கள் மற்றும் பொதுத் தளத்தில் கண்டுகொள்ளப்படாத சமூகங்களையும் முன்னேற்ற முடியும். இந்த கோரிக்கையை பா.ஜ.க. ஏற்கவில்லை. கல்வியை மாநிலங்களின் முழு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தால், இந்திய அறம் மற்றும் கலாசாரத்துடன் இளைஞர்களைப் பிணைக்க, நாடு முழுவதும் ஒரே கல்வித் திட் டத்தைக் கொண்டுவரும் காவிகளின் யோசனை பாதிக்கப்படும் என்பது காரணமாக இருக்கலாம்.

நீட் தேர்வு இருக்கக் கூடாது என்பதையும் பா.ஜ.க. ஏற்கவில்லை. ஓய்வுபெற்ற நீதிபதி ஏ. கே. ராஜனின் தலைமையில் நீட் தேர்வின் தாக்கத்தைக் கண்டறியும் கமிஷன் ஒன்றை அமைக்கு மாறு ஸ்டாலின் உத்தரவிட் டிருந்தார். பா.ஜ.கவின் மாநில செயலாளர் கே. நாகராஜன் இதற்கு எதிராக, சென்ற மாதம் சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருக்கிறார். இது, மக்கள் பணத்தை வீணடிக்கும் செயல் என்று அவர் வாதிட்டார். நாகராஜனின் வழக்கு நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், முதல்வரிடம் தாக்கல் செய்த அறிக்கையில், நீட் மோசமானது என்ற முடிவைக் குறிப்பிட்டிருக்கிறார் நீதிபதி ராஜன்.

இந்த அறிக்கையோடு வியாழக்கிழமை அன்று டெல்லியில் மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திரப் பிரதானை சந்தித்த தமிழக சுகாதாரத்துறை அமைச்சர் மா. சுப்ரமணியன், நீட் தேர்வை ரத்து செய்யுமாறு வலியுறுத்தினார். உச்சநீதிமன்றத்தில் நீட் தேர்வு தொடர்பான வழக்குகள் நிலுவையில் இருப்பதால், தீர்ப்பு வருவதற்கு முன்பாக அரசு எந்த முடிவையும் எடுக்க முடியாது என்று மத்திய அமைச்சர் தெரிவித்தார். தமிழக அரசு ஜனவரி 2020இல் தொடர்ந்த வழக்கும் இதில் அடங்கும்.

இது, மா.சுப்ரமணியனுக்கு வெளிப்படையான வருத்தத்தைத் தோற்றுவித்திருக்கிறது. பிரச்னை, தேர்வு மையங்களின் எண்ணிக்கை குறித்தது அல்ல என்றும் மாநிலக் கல்வித் திட்டத்தில் படித்த தமிழ்நாட்டு மாணவர்களுக்கு நீட் தேர்வு கடினமாக இருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார். பள்ளிப்பாடங்களில் நல்ல மதிப்பெண்கள் பெற்றிருந்தும், நீட் தேர்வில் தோல்வியுற்றதால் தமிழ்நாட்டில் இதுவரை 13 மாணவர்கள் தற்கொலை செய்துகொண்டிருக்கிறார்கள்.

தமிழ்நாடு அரசுக்கும் மத்திய அரசுக்கும் இடையே, தி.மு.கவுக்கும் பா.ஜ.கவுக்கும் இடையே இந்த நீட் விவகாரம் நெடுங்காலம் சர்ச்சையைக் கிளப்பும் என்பதில் சந்தேகமில்லை. பாஜக தலைவர் நாகராஜனின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருப்பது, பா.ஜ.கவுக்கு கிடைத்த அடி என்றே ஸ்டாலின் கூறுகிறார்.



# ஆப்கானிஸ்தான் இந்தியாவின் தலைவாசலில் ஒரு புதுத் தலைவலி?

சண்டையில் ஜெயிக்க முடியாதவர்கள், 'நீ என்னை அடிக்காதே, நானும் உன்னை அடிக்க மாட்டேன்' என்று சமாதான ஒப்பந்தம் போட்டுக்கொண்டு வெள்ளைக்கொடி காட்டுவார்கள். தலிபான் தீவிரவாதிகளிடம் அப்படி ஒரு டீல் போட்டுக் கொண்டு சமாதானம் ஆகியிருக்கிறது, உலகின் ஒற்றை வல்லரசாகத் தன்னைக் கருதிக்கொள்ளும் அமெரிக்கா. 'ஆப்கானிஸ் தானில் அல்-கொய்தா அமைப்புக்கோ, ஐ.எஸ் தீவிரவாதிகளுக்கோ புகலிடம் தர மாட்டோம்' என தலிபான் அமைப்பு கொடுத்த உறுதியை நம்புகிறார் அமெரிக்க அதிபர் ஜோ பைடன்.

தலிபான் அமைப்பை வேரறுப்பதற்காக ஆப்கானிஸ்தானில் 20 ஆண்டுகள் போர் நடத்திக் களைத்துப்போய் நாடு திரும்புகிறது அமெரிக்க ராணுவம். அமெரிக்கா இதுவரை நடத்தியதில் மிக நீண்ட போர் இது. இதற்காக அவர்கள் செலவழித்தது சுமார் 164 லட்சம் கோடி ரூபாய். அமெரிக்கப் படையினர், ஆப்கான் ராணுவத்தினர், அப்பாவி மக்கள் என சுமார் இரண்டரை லட்சம் உயிரிழப்புகள்.

'அமெரிக்கா வெளியேறுவது எங்கள் வெற்றி' என்கிறது தலிபான் அமைப்பு. வியட்நாமுக்குப் பிறகு அமெரிக்கா புறமுதுகிட்ட அடுத்த களமாக ஆப்கான் இருக்கிறது. அமெரிக்காவின் இந்தப் பின்வாங்கல், இந்தியாவைப் பேராபத்தில் தள்ளியிருக்கிறது.

2001 செப்ரெம்பர் 11ஆம் திகதி அமெரிக்காவின் உலக வர்த்தக மையக் கட்டடக் கோபுரங்களை விமானங்கள் மூலம் தாக்கிப் பேரழிவை ஏற்படுத்தியது அல்-கொய்தா அமைப்பு. 20 ஆண்டுகள் கழித்து வரும் ஆகஸ்ட் 31ம் தேதி ஆப்கனிலிருந்து கடைசி அமெரிக்க ராணுவ வீரர்களும் கிளம்பிவிடுவார்கள்.

ஒரு தேசத்தில் தீவிரவாதிகள் இருந்தாலே பெரும் அச்சுறுத்தல். ஒரு தேசத்தையே தீவிரவாதிகள் ஆட்சி செய்தால், உலகம் என்ன ஆகும் என்பதற்கான பாடம் ஆப்கானிஸ்தான். அமெரிக்கா தூவிய விஷ விதை விருட்சமாகி, அவர்களையே பதம் பார்த்ததுதான் தலிபான் வரலாறு.

ஒரு பொம்மை அரசை ஆப்கானில் நிறுவி, சோவியத் ரஷ்ய ராணுவம் உள்ளே புகுந்து ஆட்சி செய்யப் பார்த்தது. சோவியத் படைகளை விரட்டுவதற்காக ஆப்கனில் பல முஜாகிதீன் குழுக்களை அமெரிக்காவும் சவூதி அரேபியாவும் பாகிஸ்தானும் உருவாக்கின. தாலிபனும் அவற்றில் ஒன்று! ஒரு கட்டத்தில் சோவியத் படைகள் வெளியேற, தாலிபன்கள் ஆட்சியைப் பிடித்தனர். வெறும் ஐந்து ஆண்டுகள்தான் ஆப்கனை ஆட்சி செய்தது தாலிபன் அமைப்பு. ஆண்களுக்கு தாடியைக் கட்டாயமாக்கி, பெண்கல்வியை ஒழித்து, டெலிவிஷன் உள்ளிட்ட பொழுது போக்குகளைத் தடை செய்து நாட்டை இன்னும் பின்னோக்கிச் செலுத்தியது அந்த ஆட்சி.

அல்-கொய்தா உள்ளிட்ட தீவிரவாத அமைப்புகளுக்கு ஆப்கான் அப்போது பாதுகாப்பான புகலிடமானது. ஒசாமா பின் லேடன் இங்கிருந்து திட்டமிட்டு அமெரிக்காவில் தாக்குதல் நடத்த, வெகுண்டெழுந்தது அமெரிக்கா. தீவிரவாதத்தை வேரறுக்க அமெரிக்கப் படைகள் ஆப்கன் வந்தன. தலிபான் அரசு வீழ்ந்தது. ஆனால், பின்லேடனும், தலிபான் தலைவர் முல்லா முகமது ஒமரும் பாதுகாப்பாக பாகிஸ் தானில் தஞ்சமடைந்தனர். அமெரிக்காவுக்குத் தோழனாக ஒரு பக்கம் போரில் உதவிக்கொண்டே, இன்னொரு பக்கம் தீவிரவாதிகளுக்கு அடைக்கலம் கொடுக்கும் நண்பனாகவும் இருந்தது பாகிஸ்தான். இது அமெரிக்காவுக்கும் தெரியும். அதனால்தான் 2011 மே மாதம் பாகிஸ்தானில் அதிரடியாக நுழைந்து பின்லேடனைக் கொன்ற போது, அந்தத் தகவலை பாகிஸ்தான் அரசுக்கு அமெரிக்க ராணுவம் தெரிவிக்கவில்லை. பின் லேடனை அவர்கள் தப்பிக்க வைத்துவிடுவார்கள் என்று பயம்.

ஆப்கனில் ஒரு ஜனநாயக அரசை உருவாக்கு வதன் மூலம் தாலிபன்களை அழித்துவிட முடியும் என அமெரிக்கா நம்பியது. ஆனால், அது ஒருபோதும் நடக்கவில்லை. அங்கு ஓர் அரசு இருக்கிறது. அமெரிக்க ராணுவத்தின் பலத்தால் அது பிழைத்திருக்கிறது. முக்கிய நகரங்களும், நெடுஞ்சாலைகளும் தவிர வேறு எந்தப் பகுதியும் அரசின் வசம் இல்லை. அங்கெல்லாம் தலிபான்களின்

> தாலிபன் அமைப்பை வேரறுப்பதற்காக ஆப்கானிஸ்தானில் 20 ஆண்டுகள் போர் நடத்திக் களைத்துப்போய் நாடு திரும்புகிறது அமெரிக்க ராணுவம். அமெரிக்கா இதுவரை நடத்தியதில் மிக நீண்ட போர் இது. இதற்காக அவர்கள் செலவழித்தது சுமார் 164 லட்சம் கோடி ரூபாய்.

ராஜ்ஜியம்தான். பள்ளி ஆசிரியர்களுக்கு அரசாங்கம் சம்பளம் கொடுக்கிறது. ஆனால், அதை நிர்வாகம் செய்வது தலிபான்கள். நீதிமன்றங்கள் முதல் துப்புரவுப் பணி வரை எல்லாமே இப்படித்தான் இருக்கின்றன. தலிபான் தீவிரவாதி யார், சாதாரண பொதுஜனம் யார் என்று பிரித்தறிய முடியாத நிலப்பரப்பில் முடிவில்லாத ஒரு யுத்தம் செய்துகொண்டி ருக்கிறோம் என்பதைத் தாமதமாகவே அமெரிக்கா உணர்ந்தது. அதனால் தலிபான்களுடன் சமாதானமாகப் போக முடிவெடுத்தது.

முதல் கட்டமாக ஆப்கான் அரசும் தாலிபன்களும் பேச்சுவார்த்தை நடத்த பாகிஸ்தான் அரசு ஏற்பாடு செய்தது. அதன்பின் கத்தார் நாட்டின் தோஹா நகரில் தலிபான் அமைப்பு ஓர் அலுவலகம் திறந்தது. அங்கு அமெரிக்கப் பிரதிநிதியும் தாலிபன் அமைப்பினரும் பேசினர். 'இந்த மே மாதத்துக்குள் படை களை வாபஸ் பெறுகிறோம்' என அமெ ரிக்கா ஒப்புக்கொண்டது. ஆனால், கொஞ்சம் தாமதமாக இப்போதுதான் அமெரிக்கப் படைகள் வெளியேறிக் கொண்டிருக்கின்றன. பக்ராம் விமானத் தளமே ஆப்கானில் அமெரிக்கப் படை களின் தலைமையகம்போல இருந்தது. ஜூலை முதல் வாரத்தில் அதை மொத்த மாக காலி செய்துவிட்டது அமெரிக்கா.

அமெரிக்கப் போர்விமானங்களின் அரவணைப்பில்தான் நாட்டைக் காவல் புரிந்துவந்தன ஆப்கான் அரச படைகள். இப்போது அது இல்லாததால், பெரும் வேகத்துடன் முன்னேறி வருகிறது தலிபான் படை. சுமார் 85,000 முழுநேரப் போர்வீரர்களுடன் மிரட்டும் தலிபான்களைப் பார்த்து ஆப்கான் ராணுவத்தினர் பின்வாங்குகிறார்கள், சரணடைகிறார்கள், பயத்தில் பக்கத்து நாடுகளுக்குப் போய்த் தஞ்சமடைகிறார்கள். இன்னும் சில வாரங்களில் ஒட்டு மொத்த தேசமும் தலிபான் கரங்களில் போய்விடக்கூடும். இப்போதே பத்தி ரிகையாளர்கள், பெண் பிரமுகர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் என்று பலரும் தாக்கப்படுகிறார்கள்.

தலிபான்கள் இப்போது தங்களை வெறுமனே ஒரு கிளர்ச்சிக் குழுவாக நினைக்கவில்லை. அடுத்து ஆளப் போகும் அசைக்க முடியாத சக்தியாகத் தங்களைக் கருதுகிறார்கள். அப்படி அவர்கள் ஆட்சியைப் பிடித்தால், இப்போது வெளிநாட்டுப் படைகளின் ஆதரவுடன் ஆட்சியில் இருக்கும் அரசு என்ன ஆகும், தலிபான்கள் ஆதிக்கத்துக்கு வந்தால் அங்கு தூதரகங்கள் இருக்குமா, அங்கு பணிபுரியும் வெளி நாட்டவர்களுக்குப் பாதுகாப்பு கிடைக்குமா போன்ற எந்தக் கேள்விக்கும் பதில் இல்லை.

தலிபான் தலைவர் முல்லா முகமது ஓமர் இறந்ததையே அந்த அமைப்பு இரண்டு ஆண்டுகள் ரகசியமாக வைத்திருந்தது. அதன்பின் தலைவரான முல்லா அக்தர் மன்சூரை அமெரிக்கா டிரோன் தாக்குதல் நடத்திக் கொன்றது. இப்போது தலைவராக இருப்பவர், மௌல்வி ஹிபதுல்லா அகுன்ஸடா. தலிபான்களுக்கும் அல்-கொய்தா அமைப்பினருக்கும் இருப்பது ரத்த உறவு. அதனால் அவர்கள் அல் - கொய்தா தீவிரவாதிகளுக்கும் இதர வெளிநாட்டுத் தீவிரவாதிகளுக்கும் அடைக்கலம் கொடுத்து வளர்த்தால் என்ன ஆகும் என்ற கவலை உலகத்துக்கே இருக்கிறது.

தலிபான்கள் அதிகாரத்துக்கு வருவதால் இந்தியாவுக்குப் பல தலைவலிகள் ஏற்படும். ஆப்கனில் கடந்த 20 ஆண்டுகளாக ஏராளமான முதலீட்டில் திட்டங்களைச் செய்துவருகிறது இந்தியா. இதற்காக இந்தியர்கள் பலர் அங்கு உள்ளனர். தலிபான்கள் எப்போதும் பாகிஸ்தான் பக்கமே இருப்பதால், அவர்களுக்கு இந்தியா என்றால் ஆகாது. எனவே, அந்த முதலீடுகளும் இந்தியர்களின் பாதுகாப்பும் கேள்விக்குறி ஆகும். எல்லை தாண்டிய தீவிரவாதத்தின் மையப்புள்ளியாக இதுவரை பாகிஸ்தான் மட்டுமே இருந்தது. இனி அது ஆப்கான் வரை நீளும்.

தனது பெல்ட் ரோடு திட்டத்தின் மூலம் ஆசியாவையும் ஐரோப்பாவையும் இணைக்கும் சீனா, ஆப்கானைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்க விரும்புகிறது. அமெரிக்கா வெளியேறியதும் தலிபான்களுக்குத் தாலாட்டு பாடும் தாயாக சீனா மாறலாம். அப்போது இந்தியாவின் தலைவலி இன்னும் அதிகமாகும்.

நன்றி : விகடன்.





# தப்பினார் கம்மன்பில!

## நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்க்க வேண்டும் என்று ஆளுந்தரப்பினருக்கு உயர்மட்டத்திலிருந்து பறந்தது உத்தரவு

கொழும்பு, ஜூலை 18

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆளுங்கூட்டணியிலுள்ள அனைத்து அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் எதிராகவே வாக்களிக்க வேண்டும் என அரச மேல் மட்டத்திலிருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவல் அடங்கிய விசேட அறிவித்தலை ஆளுங்கட்சி பிரதம கொறடாவான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெனாண்டோ, சகல ஆளுங்கட்சி எம்.பிக்களுக்கும் நேற்றுமுன்தினம் மாலை அனுப்பிவைத்துள்ளார்.

குறித்த பிரேரணையை கட்டாயம் எதிர்த்து வாக்களிக்க வேண்டும் என்ற கண்டிப்பான உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை நாளை 19 ஆம் திகதி விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. மறுநாள் 20 ஆம் திகதி மாலை வாக்கெடுப்பு நடத்தப் படும்.

அதேவேளை, ஆளுங்கட்சியின் விசேட பாராளுமன்றக் குழுக் கூட்டம் நாளை ஜனாதிபதி கோட்டாபய ராஜ்பக்ச தலைமையில் நடைபெறவுள்ளது. இதன்போதும் இவ்விவகாரம் உட்பட ஆளுங்கட்சிக்குள் ஏற்பட்டுள்ள குழப்பநிலைகள் சம்பந்தமாக ஆராயப்பட்டு காத்திரமான முடிவுகள் எடுக்கப்படவுள்ளன.

வலுசக்தி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் ஆளுங் கூட்டணியின் தலைமைக் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் முடிவு இன்னும் உத்தியோகபூர்வமாக வெளியாகவில்லை. இந்நிலையிலேயே குறித்த பிரேரணையைக் கட்டாயம் எதிர்க்க வேண்டும் என்ற கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (இ)

# ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் மக்களின் குறைகளை நிவர்த்திசெய்ய வேண்டும்

## குருநாகலில் சு.க. உறுப்பினர்களுடனான சந்திப்பில் தயாசிறி ஜயசேகர தெரிவிப்பு

குருநாகல், ஜூலை 18.

"மக்கள் தங்களுடைய தேவை களை முன்வைத்து கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றன. இருந்த போதிலும்கூட நாங்களும் அவர்களுடன் நெருக்கமாகப் பழகி அவர்களுடைய தேவைகள் குறித்து கவனம் செலுத்தி அரசிடம் எடுத்துக் கூறி அவர்களுடைய தேவைகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். இந்தப் பணியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் முன்னுரிமையளித்துச் செயற்பட வேண்டும்."

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் பற்றிக் , கைத்தறி உள்ளூர் ஆடை உற்பத்தி துறை இராஜாங்க அமைச்சருமான தயாசிரி ஜயசேகர தெரிவித்தார்

குருநாகல் மாவட்டத்திலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாவட்ட அமைப் பாளர்கள், தொகுதி அமைப்பாளர்களுக் கிடையிலான கூட்டம் இராஜாங்க அமைச்சர் தயாசிரி ஜயசேகர தலைமையில் குருநாகல் மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் எம் எஸ்.எம். பாஹிம் இல்லத்தில் இடம்பெற்றது.



இந்தக் கூட்டத்தில் தயாசிறி மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

"இன்று உள்நாட்டில் விவசாய உணவு உற்பத்தி அதிகரிக்க விவசாயிகள் பசளை தொடர்பாகவும், ஆசிரியர்கள் தங்களுடைய சம்பளம் உயர்வ தொடர்பாகவும், இன்னும் பல தேவைகள் குறித்து அரசுக்கு எதிராகக் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனாலும், நாங்கள் அரசினுடைய பங்காளிக் கட்சியாக இருந்த போதிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவை அதிகரிக்க வேண்டுமாயின் மக்களின் தேவையறிந்து அரசிடம் எடுத்துக்கூறி அதனைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை வேண்டும்" - என்றார்.

இந்த நிகழ்வில் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார, குருநாகல் மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளரும் இப்பாகமுவ பிரதேச சபை உறுப்பினருமான எம். எஸ்.எம். பாஹிம், முஆத், பாயிஸ் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள், மக்கள் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (இ)

# கொழும்பு வைத்தியசாலையில் ரிஷாத் எம்.பி. நேற்று அனுமதி

கொழும்பு, ஜூலை 18

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் நேற்றுக் காலை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்கத்தினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அவருக்கு நேற்று திடீர் சுகயீனம் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்தே அவர் பரிசோதனைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவருக்கு விசேட பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது. (இ)

# இரு சிறுமிகள் துஷ்பிரயோகம்

## தந்தை கைது

பதுளை, ஜூலை 18

பதுளை - தெமோதர பகுதியில் 12 மற்றும் 14 வயதான இரண்டு சிறுமிகள் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

சிறுமிகள் திடீர் சுகயீனமடைந்ததை அடுத்து, இருவரும் பதுளை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது, இருவரும் கர்ப்பம் தரித்துள்ளமை வைத்தியர்களால் உறுதி செய்யப்பட்டது எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவம் தொடர்பில், சிறுமிகளின் தந்தையான 34 வயதான நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சிறுமிகள் தொடர்ந்தும் பதுளை வைத்திய சாலையில் சட்ட மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# போதைப்பொருள் சுற்றிவளைப்புகளில் பலர் ஹெரோயினுடன் மாட்டினார்கள்

கொழும்பு, ஜூலை 18.

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட போதைப்பொருள் சுற்றிவளைப்புகளில் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதற்கமைவாக கட்டுகஸ் தோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அலதெனிய பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 105 கிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். நியங்கொட, கும்புரேகம பிரதேசத்தைச்சேர்ந்த 24 வயதுடைய நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, வெலிப்பன்ன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெலிப்பன்ன பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 8 கிராம் 640 மில்லி கிராகம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். நவத்துடுவ, மத்துகம பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதுடைய நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஸ்டேஸ்புர பகுதியில் 5 கிராம் 10 மில்லி கிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். ஹெரோய்ன் விற்பனையில் பெற்றுக்கொண்ட ஒரு இலட்சத்து 41 ஆயிரத்து 500 ரூபாய் பணத்தையும் குறித்த நபரிடமிருந்து பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். கிராண்ட்பாஸ் பிரதேசத்தைச் சேர்ந்த 63 வயதுடைய நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மட்டக்குளி, குபிக்கெல பிரதேசத்தில் 5 கிராம் 190 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். மட்டக்குளி பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பேருவளை பொலிஸ் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 4 கிராம் 510 மில்லி கிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். பிங்ஹேன பேருவளைப் பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடைய நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

எகொடஉயன பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட பிரதேசத்தில் 4 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

# 4 கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருள் சிக்கியது!

கொழும்பு, ஜூலை 18

அமெரிக்காவிலிருந்து இலங்கைக்கு போலியான முகவரிக்கு பொதி சேவை ஊடாக அனுப்பப்பட்ட சுமார் 04 கிலோ கிராம் போதைப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக சுங்கப் பிரிவின் ஊடகப் பேச்சாளர் சுதத்த சில்வா தெரிவித்தார்.

கடித உறைகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த அதிகளவான போதைப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளுக்காக அது பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:

இலங்கை சுங்கத் திணைக்களத்தின் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரிகள் மற்றும் சீதுவ பகுதியிலுள்ள கூரியர் நிறுவனத்தில் தினசரி பணியில் ஈடுபடும் சுங்க மதிப்பீட்டாளர்களால் போதைப் பொருள் இருப்பதாக சந்தேகிக்கப்படும் 05 கடிதப் பொதிகளை ஆய்வு செய்ததில் குஷ் எனப்படும் கஞ்சா 3,900 கிராம் மீட்கப்பட்டுள்ளதுடன், கடித உறைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கஞ்சா விதைகளும் மீட்கப்பட்டன. அமெரிக்கா மற்றும் நெதர்லாந்து போன்ற நாடுகளிலிருந்து பிலியந்தலை, இங்கிரிய, மினுவங்கொடை, மாத்தறை மற்றும் பொல்கஹவிட ஆகிய பகுதி போலி முகவரிகளுக்கே அவை அனுப்பப்பட்டுள்ளன.

இவ்வாறு அனுப்பப்பட்டுள்ளபோதைப்பொருட்களின் பெறுமதி சுமார் 04 கோடி இலங்கை ரூபா பெறுமதி கொண்டது.

கடிதப் பொதிகள் அனுப்பப்பட்ட முகவரிகளை ஆய்வுக்கு உட்படுத்தியதில் அதில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் குறித்து எந்த தகவலும் கிடைக்கவில்லை.

# பொருளாதார நெருக்கடியைப் பயன்படுத்தி ஆட்சியைக் கவிழ்க்க முயற்சிக்க வேண்டாம்

## எதிரணியிடம் நிதி அமைச்சர் பஸில் கோரிக்கை



**கொழும்பு, ஜூலை 18**

**"இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியைப் பயன்படுத்தி ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசின் ஆட்சியைக் கவிழ்க்க முயற்சிக்க வேண்டாம் என்று எதிர்க்கட்சிகளிடம் விநயமாகக் கேட்டுக்கொள்கின்றேன்."**

**- இவ்வாறு நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

நாட்டில் தற்போது கையிருப்பில் உள்ள 4 பில்லியன் ரூபாவை முகாமைத்துவம் செய்வதன் மூலம், பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க முடியும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

போர் நிலவிய காலப்பகுதியில் நாட்டில் 1.2 பில்லியன் டொலர் கையிருப்பு காணப்பட்டது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக நாடு சில தடவைகள் முடக்கப்பட்டமையால், அரசுக்கு நிதி கிடைக்கும் வழிகளில் தடங்கல் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசுக்குக்கும், மக்களுக்கும் பணம் கிடைக்கும் முறைமையை நடைமுறைப் படுத்துவதற்கு கூடிய விரைவில் நாடு முழுமையாகத் திறக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

டொலரின் பெறுமதி அதிகரிப்பது தொடர்பில் பொய்ப் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும், இந்த நிலைமையை எதிர்கொள்வதற்குத் தாம் தயாராக இருப்பதாகவும் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார். (இ)

# யாழ்.மாவட்டத்தில் 40 பேர் உட்பட வடக்கில் 63 பேருக்குத் தொற்று!

யாழ்ப்பாணம், ஜூலை 18

வடக்கு மாகாணத்தில் நேற்று 63 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் 596 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி. ஆர். பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்களில் பருத்தித்துறையைச் சேர்ந்த 07 வயதுடைய சிறுமி ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் 40 பேருக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் 06 பேருக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒருவருக்கும், வவுனியா மாவட்டத்தில் 02 பேருக்கும், மன்னார் மாவட்டத்தில் 04 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்களுடன் பரந்தன் தனிமைப் படுத்தல் நிலையத்தில் 10 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (இ)

# ஒடுக்குமுறைகளை உடன் நிறுத்துங்கள்

## அரசிடம் ஆசிரியர் சேவை சங்கம் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 18

அரசு தற்போது ஆரம்பித்துள்ள ஒடுக்குமுறைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதான செயலாளர் மஹிந்த ஜயசிங்க வலியுறுத்தினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கடந்த 8ஆம் திகதி அநீதி இழைக்கும் வகையில் கைதுசெய்யப்பட்டு தனிமைப்படுத்தல் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்டவர்களை, அரசு வெறும் 8 நாட்களுக்குள் விடுவித்தது.

இது மாணவர் கல்வி வியாபாரம் மற்றும் தொழில் வகுப்பினரின் போராட்டத்துக்குக் கிடைக்கப் பெற்ற வெற்றியாகும்.

அரசு தனது மக்கள் பலத்தை வைத்து நாட்டின் மாணவர் கல்வி வியாபாரம், தொழில் வகுப்பினரை ஒடுக்குவதற்கு முயற்சித்தது. எனினும், நாம் அரசிடம் ஒன்றைக் கூற விளைகின்றோம். உங்களது முயற்சிகளை முறியடிப்பதற்காக மாணவர் படையணியும் தொழில் வகுப்பினரும் ஒன்றிணைந்துள்ளோம்.

அரசுக்கு நாம் கொடுத்த அழுத்தத்தை அரசு புரிந்துகொள்ள வேண்டும்.

மாணவர் கல்வி வியாபாரம், தொழில் வகுப்பினருக்கு எதிராக அரசு செயற்படுமாயின் இவ்வாறான பின்விளைவுகள் ஏற்படும் என்பதை அரசுக்குத் தெளிவாகக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

எனவே, அரசு ஆரம்பித்துள்ள இந்த ஒடுக்குமுறைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லாது உடனடியாக நிறுத்த வேண்டும்" - என்றார். (இ)

## எதிர்க்கட்சிகள்...

இதில் கலந்துகொள்ள அனைத்து எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது.

தமிழர் தரப்பிலுள்ள ஒவ்வொரு கட்சிகளுக்கும் தனித்தனியாக அழைப்பு அனுப்பப்பட்டது. எனினும், இந்தக் கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் அதன் தலைவர் மாவை சேனாதிராஜாவும், பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனும் கலந்துகொண்டனர். தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பில் அதன் தலைவர் மனோ கணேசன் உள்ளிட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

ஆனால், ரெலோ, புளொட், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் எவரும் சந்திப்பில் பங்கேற்கவில்லை. ஆனால், சந்திப்புக்கு ஆதரவு தெரிவித்து குறித்த கட்சிகளின் தலைவர்கள் கடிதம் அனுப்பியிருந்தனர்.

இதேவேளை, நேற்றைய சந்திப்பில் எதிர்க்கட்சித் தலைவரான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ பங்கேற்றிருந்த போதிலும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பங்கேற்கவில்லை. ஆனால், சந்திப்புக்கான ரணிலின் ஆதரவுக் கடிதத்துடன் அவரின் பிரதிநிதி ஒருவர் கலந்துகொண்டார். (இ)

## துமிந்தவுக்கு...

யின் பொதுமன்னிப்பில் விடுவிக்கப்பட்டார். இந்தநிலையில், சில தினங்களுக்கு முன்னர் அவர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்திருந்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் கீழ் உள்ள வீடமைப்பு அமைச்சின் கீழ் வரும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவராக துமிந்த சில்வா நியமிக்கப்பட்டுள்ளார். (இ)

## கொரோனா...

இதற்கமைய நாட்டில் இதுவரையில் பதிவாகியுள்ள கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 733 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 31 பேரில் 17 ஆண்களும், 14 பெண்களும் அடங்குகின்றனர்.

இவர்களில் 30 - 50 வயதுகளுக்கு இடைப்பட்ட 6 ஆண்களினதும், 2 பெண்களினதும் மரணங்கள் பதிவாகியுள்ளன.

அவ்வாறே, 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட 11 ஆண்கள் மற்றும் 12 பெண்களின் மரணங்களும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. (இ)

## ஆட்சியை...

கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

நாட்டில் தற்போது உருவாகியுள்ள போராட்ட அலையானது, மக்களுக்கான நலன்புரி விடயங்களை அடிப்படையாகக்கொண்டது அல்ல. மாறாக அரசின் வேலைத்திட்டங்களைக் குழப்பி, ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான துஷ்ட நடவடிக்கையாகும்.

போராட்டத்தை முன்னெடுப்பதற்கான ஜனநாயக உரிமை அதனை முன்னெடுப்பவர்களுக்கு இருப்பதால் இதுவரை காலமும் பொலிஸார் அவற்றை பார்த்துக்கொண்டிருந்தனர். இந்நிலையில் போராட்டங்கள் மற்றும் கூட்டங்களுக்கு தடை விதிக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளரிடமிருந்து எமக்கு தெளிவானதொரு பணிப்புரை விடுக்கப்பட்டது.

இதற்கமையவே பொலிஸார் சென்று அன்று போராட்டத்தை நிறுத்தினர். பொலிஸாரின் தேவைக்காக அவர்களை தனிமைப்படுத்தலுக்கு கொண்டு செல்லவில்லை. பொதுச் சுகாதார பரிசோதகர்கள் உத்தியோகப்பூர்வமாக முன்வைத்த கோரிக்கையின் பிரகாரமே தனிமைப்படுத்தலுக்கு அனுப்பட்டனர்-என்றார்.

## 1,452 பேருக்கு...

அத்துடன்,கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 962 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 55 ஆயிரத்து 833 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் தற்போது 23 ஆயிரத்து 946 பேர் சிகிச்சை பெறுகின்றனர். (இ)

## இரண்டு தடுப்பூசி...

காணப்படுவதாகவும் அந்தப் பணியாகத்தின் பணிப்பாளர் வைத்தியர் ரஞ்சித் சுட்டிக்காட்டினார்.

ஆகவே மக்கள் அனைவரும் சுகாதார வழிகாட்டுதல்களை அவசியம் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

நாட்டில் படிப்படியாக சுகாதாரக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டாலும் தொற்றின் நிலைமையை கருத்திற்கு கொண்டு மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தடையை தளர்த்துவது அல்லது நீடிப்பது குறித்து அறிவிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

டெல்டா மாறுபாடு அதிகரிக்கும் பட்சத்தில் மேலதிக கட்டுப்பாடுகள் அமுல்படுத்துவதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாகவும் சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தின் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

## நாணய நிதி...

ளது.

இருந்தபோதிலும் இலங்கை அதிகாரிகளுடன் தொடர்ந்தும் ஒத்துழைத்துச் செயற்படுவதாக அவர் கூறியுள்ளார்.

பேரினப் பொருளாதார அபிவிருத்தி, பொதுக் கண்ணோட்டம் மற்றும் பேரினப் பொருளாதார கொள்கைகள் தொடர்பாக இலங்கையுடன் பேச்சு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

நிதி உதவிக்கான எந்த கோரிக்கையும் இலங்கை அரசாங்கத்திடம் இருந்து முன்வைக்கப்படவில்லை.

ஆனால் இவ்வாறான கோரிக்கை முன்வைக்கப்பட்டால், அதன்பாலுள்ள தெரிவுகளை முன்னிலைப்படுத்தி பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு தயாராக உள்ளோம் என்று நாணய நிதியத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் தெரிவித்தார்.

## பயங்கரவாத...

யாகும்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட பல வெளிநாட்டு நிறுவனங்கள் பயங்கரவாதத் தடை சட்டத்தில் திருத்தம் அல்லது இரத்து செய்யுமாறு இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றன.

இதை செய்யாவிட்டால் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நெருக்கடி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி பிளஸ் சலுகையை இழக்கும்.

இதையடுத்து, பயங்கரவாத தடைச் சத்தில் திருத்தம் செய்வதாக வெளிவிவகார அமைச்சு சமீபத்தில் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு அறிவித்தது.

தற்போதைய சூழ்நிலைகளில் பொருந்தாத சில சரத்துகளைத் திருத்தும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஈழநாடு
Eelanadu



# "டெங்கு" காய்ச்சல் மீண்டும் அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 18

தென்மேல் பருவப்பெயர்ச்சி மழையுடன் டெங்கு காய்ச்சல் மீண்டும் அதிகரித்துள்ளது என டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 15 ஆயிரத்து 160 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஜூன் மாதத்திலேயே அதிகமானோருக்கு டெங்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ளது என டெங்கு ஒழிப்புப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் ஹிமாலி ஹேரத் குறிப்பிட்டார்.

கடந்த மே மாதத்தில 1,440 பேர் டெங்கு காய்ச்சலுடன் அடையாளங்காணப்பட்ட நிலையில், ஜூன் மாதத்தில் இரு மடங்காக அதிகரித்து 2 ஆயிரத்து 997 பேர் டெங்கினால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார்.

இந்நிலையில், இம்மாதம் 15 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 1,693 பேருக்கு டெங்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ளது.

மேல் மாகாணத்திலேயே பெரும்பாலானோர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தில் மாத்திரம் 7 ஆயிரத்து 352 பேர் டெங்கு காய்ச்சலுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனைத் தவிர கண்டி, குருநாகல், காலி, அம்பாந்தோட்டை, மாத்தறை மற்றும் கேகாலை மாவட்டங்களில் அதிகமாக டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் எனவும் டெங்கு ஒழிப்பு பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது. (இ)

# கூட்டமைப்பின் இரு பங்காளிகள் விக்கி கூட்டணியினருடன் பேச்சு

## தமிழரசுக் கட்சி சார்பில் எவரும் பங்கேற்கவில்லை



யாழ்ப்பாணம், ஜூலை 18

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய இரு கட்சிகளின் தலைவர்களும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியினரும் யாழ்ப்பாணத்தில் நேற்று நேரடிப் பேச்சில் ஈடுபட்டனர்.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் ரெலோவின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரம், எஸ்.வினோநோகராதலிங்கம் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் சார்பில் அதன் தலைவர் சி.வி. விக்னேஸ்வரன், பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், என்.சிறிகாந்தா, எம். கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்ட குழுவினர் பங்கேற்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோ முன்னெடுத்து வரும் ஒற்றுமை முயற்சியின் ஓர் அங்கமாக இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

எனினும், மாவை சேனாதிராஜா தலைமையிலான இலங்கைத் தமிழரசுக் கட்சி இந்தச் சந்திப்பில் கலந்து கொள்ளவில்லை.

இந்தச் சந்திப்பை ஏற்பாடு செய்த ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், மாவை சேனாதிராஜாவுக்கு தொலைபேசி வழியாக அழைப்பு விடுத்திருந்தார். எனினும், அவர் பிறிதொரு நிகழ்வுக்காகக் கொழும்பில் தங்கியுள்ளார். அதனால் அவர் இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால், அவர் சார்பில் பிரதிநிதிகள் எவரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளவில்லை.

இந்தக் கூட்டத்தின் ஆரம்பத்தில், "எமது ஒற்றுமை முயற்சி பதவியை, தலைமையை நோக்கமாகக் கொண்டதல்ல. மக்கள் நலன் சார்ந்தது எனக் கூட்டத்தின் ஆரம்பத்தில் ரெலோ தரப்பால் கூறப்பட்டது. எனினும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் சார்பில் கலந்து கொண்ட அதன் பங்காளிக் கட்சியான ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கொஞ்சம் காட்டமாகக் கருத்து தெரிவித்தார்.

"ஏற்கனவே 10 கட்சிகள் ஒற்றுமை முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதில் தமிழ்த் தேசிய பேரவை பற்றி நான் கருத்துத் தெரிவித்தது பிழை என்று தமிழரசுக் கட்சி குழப்பியது. ரெலோவும் அதை ஆதரித்து அறிக்கை வெளியிட்டது. அது பிழையென்றால், அது பற்றி கலந்துரையாடியிருக்கலாம். அதைவிட்டு, குழப்புவதைப் போல் நடந்து விட்டு, இப்போது புதிய கூட்டணி முயற்சிக்கு ஏன் வருகின்றீர்கள்?" என்று செல்வம் அடைக்கலநாதனிடம் கேள்வியெழுப்பினார் சுரேஷ்.

பழைய முயற்சிகளில் ஏதேனும் குறைகள் இருந்தால் அதை நிவர்த்தி செய்து அதனையே தொடரலாம் என்றும் சுரேஷ் குறிப்பிட்டார்.

எனினும், ஒற்றுமை முயற்சியின் அவசியத்தை தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் ஏனைய இரண்டு கட்சிகளான தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசியக் கட்சி ஆகியன ஏற்றுக்கொண்டன. ஆனால், அது தொடர்பில் தொடர்ந்து பேச வேண்டும் என்று அவர்கள் குறிப்பிட்டனர்.

இந்தக் கூட்டத்தின் ஆரம்பத்திலேயே "செல்வம் உங்கள் முயற்சி பெயிலியர்" என்று விக்னேஸ்வரன் குறிப்பிட்டார்.

சந்திப்பின் இறுதியில் விக்னேஸ்வரன், "நாம் என்ன அடிப்படையில் சேர்ந்தியங்குவதென்பதை தீர்மானிக்க வேண்டும். தமிழ்த் தேசியப் பேரவையா, கூட்டணியா அல்லது வேறு வடிவமா என்பதைத் தீர்மானிக்க வேண்டும். எந்தப் பிரச்சினைகளில் சேர்ந்தியங்குவது என்பதையும் தீர்மானிக்க வேண்டும். அதற்காக முதலில் தமிழ் மக்களின் பிரச்சினைகளைப் பட்டியலிடுவோம். அதில் எதில் இணைந்து செயற்படுவது என்பதைத் தீர்மானிப்போம்" என்று கூறினார். (இ)

# கொரோனாவால் வாழும் அரசாக மாற்றமடைந்துள்ளது இந்த அரசு

## சமன் ரட்ணப்பிரிய சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூலை 18

"கொரோனாவால் வாழும் அரசாக இந்த அரசு மாறியுள்ளது. மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்காது, நாட்டுப் பிரச்சினைகளையும் தீர்க்காது ஒடுக்கு முறையைப் பிரதானப்படுத்தி ஆட்சி செய்ய இந்த அரசு முயல்கின்றது."

- இவ்வாறு அரச தாதியர் சங்கத்தின் தலைவர் சமன் ரட்ணப்பிரிய தெரிவித்தார்.

உழைக்கும் மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"கல்வி உரிமைக்காகப் போராடிய இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட குழுவினரை, தற்போதைய அரசு தனிமைப்படுத்தல் நிலையத்துக்குக் கொண்டுச் சென்று சிறை வைத்தது. அதேபோன்று அதற்காகப் போராடிய நாகமுவ உள்ளிட்ட குழுவினரையும் இந்த அரசு தனிமைப்படுத்தல் சிறையில் வைத்தது.

அதற்குப் பின்பும் மஹிந்த ஜயசிங்க உள்ளிட்ட குழுவினரையும் அரசு கைது செய்தது. நீதிமன்றத்தினூடாகவே அவர்களையும் பிணையில் எடுக்க முடிந்தது.

இந்த அரசு மக்களை ஒடுக்குவதற்கே முயல்கின்றது. மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்காது, நாட்டுப் பிரச்னையைத் தீர்க்காது ஒடுக்குமுறையைப் பிரதானப் படுத்தி ஆட்சிசெய்ய முயல்கின்றது.

கொரோனாவால் வாழும் அரசாக இந்த அரசு மாறியுள்ளது. தனிமைப் படுத்தல் சட்டத்தை வைத்துக்கொண்டு தொடர்ந்து ஆட்சியைக் கொண்டுச் செல்ல இந்த அரசு முயல்கின்றது.

ஜோசப் ஸ்டாலின் என்பவர் இலங்கை ஆசிரியர் சங்கத்தில் மிக முக்கியமான நபர். அவர் அனைத்துவிதமான போராட்டங்களிலும் முன்னின்றவர்.

கல்வி உரிமைக்காக, விவசாயிகளின் உரிமைக்காக, சுகாதார உரிமைக்காக, கடற்றொழிலாளர்களின் உரிமைக்காக என அனைத்து விதமான போராட்டங்களிலும் முன்னின்று போராடியவர். அரசு தவறிழைத்துள்ளது.

ஒவ்வொருவர் மீதும் கைவைத்த அரசு ஜோசப் ஸ்டாலின் மீதும் கைவைத்துள்ளது. இதன் பின்பே நாம் அனைவரும் ஒன்றிணைந்து போராடத் தொடங்கினோம்" - என்றார். (இ)

# மாடறுப்பை நிறுத்த நடவடிக்கை எடுக்குக

## உள்ளூராட்சி சபைகளுக்கு அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 18

மாடுகளை வெட்டுவதை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் இராஜாங்க அமைச்சு, அனைத்து உள்ளூராட்சி சபை களுக்கும் அறிவித்துள்ளது.

அரசின் கொள்கை ரீதியான தீர்மானத்துக்கு அமைய செயற்படுமாறு உள்ளூராட்சி சபை அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என அமைச்சின் செயலாளர் எஸ்.டி.ஏ.பி. பொரலெஸ்ஸ தெரிவித்தார். இதற்குத் தேவையான நான்கு சட்டத்திருத் தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளதுடன், அவை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளன எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (இ)

# வாகன விபத்தில் பெண் உயிரிழப்பு

தம்புள்ளை, ஜூலை 18

கிரிஎல்ல பொலிஸ் பிரிவுக் குட்பட்ட தம்புள்ளை 2ஆம் மைல் கல் பகுதிக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

தம்புள்ளைப் பகுதியைச் சேர்ந்த 77 வயது பெண்ணே மரணமடைந்துள்ளார்.

தம்புள்ளையிலிருந்து மடல பிரதேசத்துக்குப் பயணித்த ஓட்டோ ஒன்றில் மோதுண்டே குறித்த பெண் உயிரிழந்துள்ளார்.

ஓட்டோவின் சாரதி தப்பியோடியுள்ள நிலையில் சாரதியைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (இ)






இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.07.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை
**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி-பரமசிவன்
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : COFFE WITH பிரமுகர் -கலைஞர் கலை



6.00 மணி : கலக்கல் ஸ்ரார்-
திறமையாளர்களுக்கான களம்
**இரவு**
7.00 மணி : SPOTLIGHT- மட்டக்களப்பு
மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்
கோவிந்தன் கருணாகரம் (TNA)



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி : செல்லாடுகளம்
10.00 மணி: -நேர்கொண்ட பார்வை-
மு.பரணீதரன்-பிரசார செயலாளர்
ஜனநாயக மக்கள் முன்னணி



**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்
**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை
**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு